Registered as a NewsPaper

விலை ரூபா 10.00

# ஈழநாதம்
மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | மார்கழி-02 | 17-12-2005 | சனிக்கிழமை | ஓசை-302


S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா. உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.
T.P: 024-222 4247 (சி-13510)

# குடாநாட்டில் படையினரின் அடாவடித்தனங்கள் அதிகரிப்பதையிட்டு புலிகள் கடும் கண்டனம்

## தடுத்து நிறுத்த போ.நி.க.குழுவிற்கு வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

**யாழ். குடாநாட்டில் பொதுமக்கள் மீதான சிறிலங்காப் படையினரின் அடாவடித்தனங்கள் அதிகரித்துவரும் நிலையில் இது தொடர்பாக யாழ். மாவட்ட அரசியல்துறையினர் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரைச் சந்தித்துத் தமது கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளனர்.**

மேற்படி சந்திப்பு நேற்றுக்காலை பத்து மணியளவில் பளையிலுள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுச் செயலகத்தில் இடம் பெற்றுள்ளது.

இச்சந்திப்பில் விடுதலைப்புலிகள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களாவது;

மக்களது இயல்பு வாழ்க்கை பாதிப்படையும் வகையில் திடீர் சுற்றிவளைப்பு இடம்பெறுதல், வீடுகளில் படையினர் தேடுதல் நடவடிக்கையின் போது (12ஆம் பக்கம் பார்க்க)

## அரியாலை, மீசாலைப் பகுதிகளில் படையினர் சுற்றிவளைத்துத் தேடுதல்!

(யாழ்ப்பாணம்)

அரியாலை மற்றும் மீசாலைப் பகுதிகள் சிறிலங்கா படையினரால் நேற்று சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல்கள் மேற்கொள்ளப் பட்டன.

அரியாலைப் பகுதியிலுள்ள முள்ளிக் கிராமம் நேற்று அதிகாலை இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதிகாலையில் இருந்தே இராணுவத்தினர் இப்பகுதியைச் சுற்றி வளைத்தபோதிலும் இப்பகுதி மக்கள் வழமை போன்ற நடவடிக்கையெனக் கருதி இருந்தார்கள். ஆனால், குறிப் (12ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூரில் மாணவர் மீது படையினரால் மிக மோசமாகத் தாக்கு!

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பின் வீதியில் நேற்றிரவு ஈருருளியில் வந்த மாணவர் இருவர் சிறிலங்காப்படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டு படுகாயப் படுத்தப்பட்டுள்ளனர். இதுதொடர்பாக கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் இங்கு பெரும் பதற்றமும் காணப் படுகிறது.

நேற்று மாலை ஏழுமணியளவில் கல்வி நிலையம் ஒன்றுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த மாணவர்களே நல்லூர் பின்வீதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினரால் கடுமையாகத் தாக் (12ஆம் பக்கம் பார்க்க)

# படையினரின் கெடுபிடிகளை நிறுத்தாவிடில் ஆபத்தான சூழலை தடுத்து நிறுத்த முடியாது

## யாழ். அரச அதிபருக்கு பல்கலை மாணவர் சமூகம் கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். இல் இராணுவத்தினரின் கெடுபிடிகளை நிறுத்தி இயல்பான நிலையை ஏற்படுத்துமாறும் இல்லையேல் அங்கு ஏற்படவுள்ள ஆபத்தான சூழலை தடுத்து நிறுத்த முடியாது போய் விடுமென பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் யாழ். அரச அதிபருக்கு அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

நேற்று முன்தினம் யாழ். நகரை அண்டிய பகுதிகளையும், பல்கலைக்கழகத்தை அண்டிய பகுதிகளையும் சுற்றிவளைத்த படையினர் பல்கலைக்கழக மாணவர்களை கடுமையாகத் தாக்கியதுடன் அவர்களின் பல்கலைக்கழக அடையாள அட்டைகளையும் கிழித்தெறிந்துள்ளனர். அத்துடன் விரிவுரையாளர்களின் (12ஆம் பக்கம் பார்க்க)

# கோப்பாய் மாலதி நினைவாலயத்துள் படையினர் அத்துமீறி நுழைந்து அடாவடி!

## உடமைகள் பலவும் அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோப்பாய் தரவையிலுள்ள முதல் பெண்மாவீரர் 2ஆம் லெப்.மாலதியின் நினைவாலய வளாகத்துள் புகுந்த இராணுவம் அங்கிருந்த நினைவுச் சின்னங்களைச் சேதப்படுத்தியுள்ளதுடன் உடமைகள் சிலவும் படையினரால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளன.

கோப்பாய் கைதடிவீதியில் 2ஆம் லெப்மாலதியின் நினைவாலயம் உள்ளது. இந் நினைவாலயம் அவர் வீரச்சாவடைந்த இடத்தில் அமைக்கப்பட்டுள்ளதால் புனிதத் தன்மை கருதி அந்நினைவாலய வளாகத்தைச் சூழ கம்பிவலைகள் அடிக்கப்பட்டிருந்தன. அத்துடன் அங்கு இடம்பெறும் எழுச்சி நிகழ்வுகளுக்காக அவ்வளாகத்துள் கொடி (12ஆம் பக்கம் பார்க்க)

# அரசியல்துறைப் பொறுப்பாளருடன் தொண்டமான் இன்று சந்திப்பு

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் இன்று சனிக்கிழமை கிளிநொச்சிக்கு வருகை தந்து தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

கிளிநொச்சியிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் காலை 11.00 மணியளவில் இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை தமிழ்தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களையும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் எதிர்வரும் திங்கட்கிழமை சந்தித்துப் பேசுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்த் தரப்பினர், சகல (12ஆம் பக்கம் பார்க்க)

# குடாநாட்டிற்கு புதிதாக படையினர்: திருமலையிலிருந்து அனுப்பிவைப்பு

## பாதுகாப்பு ஏற்பாடுகளும் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் புதிதாக பத்தாயிரம் படைகள் களமிறக்கப்பட்டுள்ளதாக யாழ். செய்திகள் தெரிவிக்கின்றன. திருகோணமலை கடற்படைத் தளத்திலிருந்து யாழ். காங்கேசன்துறை கடற்படைத் தளத்திற்கு நாளாந்தம் பல கப்பல்கள் சென்று கொண்டிருப்பதாக யாழ். கடற்றொழிலாளர்கள் கூறுகின்றனர்.

காங்கேசன்துறைக்கு வந்திறங்கும் இராணுவத் துருப்புக்கள் மாலை வேளைகளில் குறிப்பாக ஆறு, ஏழு மணி போன்ற வேளைகளில் கனரக வாகனங்களில் யாழ். குடாநாட்டின் ஏனைய இராணுவ முகாம்களுக்கும் கொண்டு செல்லப்படுகின்றனர்.

யாழ்ப்பாணத்தின் பிரதான வீதிகளில் குறிப்பாக யாழ். குடாநாட்டு கரையோரப் பகுதிகள், கண்டி வீதி ,பருத்தித்துறை வீதி போன்றவற்றில் 75 மீற்றருக்கு இரு இராணுவ சிப்பாய்கள் தரித்து நின்று கண்காணிப்பு (12ஆம் பக்கம் பார்க்க)

# ஐரோப்பிய ஒன்றியத்திடம் புலிகளை தடைசெய்யுமாறு கோர மகிந்த முடிவு

## மங்களசமரவீர ஊடாக நடவடிக்கை

விடுதலைப்புலிகள் இயக்கத்தை தடைசெய்யுமாறு ஐரோப்பிய ஒன்றியத்தைக்கோர மகிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார். சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் மங்களசமர வீர மூலம் ஐரோப்பிய ஒன்றியத்திடம் கோரிக்கை ஒன்றை விடுப்பதற்கு சிறிலங்கா அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக நம்பகரமான வட்டாரங்களின் மூலம் தெரியவருகின்றது.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் கூட்டமொன்று இந்த மாத இறுதியில் பிரஸெல்ஸில் நடைபெற இருக்கின்றது. இந்தக்கூட்டத்தில் இவ்விடயத்தை பரிசீலிக்கத்தக்கவாறு ஐரோப்பிய ஒன்றிய அங்கத்துவ நாடுகளின் மத்தியில் பரப்புரை மற்றும் ஆதரவு தேடும் நடவடிக்கைகளையும் முன்னெடுக்குமாறு சிறிலங்கா வெளிவிவகார அமைச்சு திட்டமிட்டுள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகளை தடை (12ஆம் பக்கம் பார்க்க)

# யுத்த நிறுத்த உடன்படிக்கையைத் திருத்தியமைக்க ஆசிய நாடு ஒன்றில் பேச்சு நடாத்தத் தயார்!

## சிறிலங்கா அரசு உத்தியோகபூர்வமாக அறிவிப்பு

(கொழும்பு)

யுத்த நிறுத்த உடன்படிக்கையைத் திருத்துவது தொடர்பாக ஆசிய நாடு ஒன்றில் பேச்சுவார்த்தை நடாத்தத் தயார் என்று சிறிலங்கா அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை ஊடகவியலாளர்களிடம் பேசிய சிறிலங்கா அரசாங்கத்தின் பேச்சாளரும் அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வா இதைத் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்து தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு நோர்வே அனுசரணையாளர் ஊடாக சிறிலங்கா சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தியோகபூர்வமாக் கடிதம் அனுப்பியுள்ளார் என்றும் அரசாங்கப் பேச்சாளர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார். சிறிலங்கா சமாதான செயலகம் மற்றும் நோர்வே அனுசரணையாளர் (12ஆம் பக்கம் பார்க்க)

# பத்திரிகை அலுவலகம் மீதான தேடுதலை வன்மையாகக் கண்டிக்கிறோம்

## யாழ். உயர்கல்வி நிறுவனங்களின் மாணவர் அமையம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா ஆக்கிரமிப்புப் படைகள் ஈழநாடு பத்திரிகை அலுவலகத்தில் தேடுதல் நடாத்தியதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோமென யாழ். மாவட்ட உயர்கல்வி நிறுவனங்களின் மாணவர் அமையம் தெரிவித்துள்ளது.

சுதந்திரமான பத்திரிகையாளர்களையும் ஊடகத்துறைகளையும் இவ்வாறு அச்சுறுத்துவதானது சர்வதேச சட்டதிட்டங்களை அவமதிப்ப தாகவே அமையும், யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட பின்னரும் கூட இவ்வாறு சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றிவளைப்புக்களை மேற்கொண்டு மக்களை கைது செய்வதும் அச்சுறுத்துவதும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் மாறாக தொடர் சுற்றிவளைப்புக்கள் மேலும் சமாதானத்தினை முற்று முழுதாக இல்லாமல் செய்து விடும் சூழலை இன்று தோற்றுவித்துள்ளன. எனவே சிறிலங்கா ஆக்கிரமிப்பு இராணுவமும், அதன் புதிய தளபதியும் இது தொடர்பில் உரிய கவனம் செலுத்த வேண்டுமென நாம் கேட்டுக்கொள்கிறோம் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (28)

## வெளிச்சம் சஞ்சிகையின் 93 ஆவது இதழ் வெளிவந்துள்ளது

(அலுவலக செய்தியாளர்

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்தின் வெளியீடான 'வெளிச்சம்' கலை, இலக்கிய சஞ்சிகையின் தொண்ணூற்றி மூன்றாவது (ஐப்பசி-மார்கழி 2005) இதழ் வெளிவந்துள்ளது.

தமிழீழ தேசியத்தலைவரின் கருத்துரையுடன், மாலிகா, புதுவை இரத்தினதுரை, அறிவுமதி, சுப.வீரபாண்டியன், இன்குலாப், நா. முத்துக்குமார் ஆகிய கவிஞர்களது மாவீரர் நாள் சிறப்புக் கவிதைகளும் தமிழவள், யாத்ரிகன், அம்புலி, இளைய அப்துல்லாஹ், வேலணையூர் சுரேஷ், கை.சரவணன் ஆகிய கவிஞர்களது கவிதைகளும், ம.தி. சாந்தன், முருகு பாரிமகன், எஸ்.பி. கிருஸ்ணன், சு.மகேந்திரன் ஆகியோரது சிறுகதைகளும் இடம் பெற்றிருக்கின்றன.

இவற்றுடன் சிந்துஜன், இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன் மகாநுபவன், பு.சத்தியமூர்த்தி, கிருத்திகா,ரஹீம், யதீந்திரா ஆகியோரது கட்டுரைகளும் குறிப்புகள், புதிய வரவுகள் இன்னும் பலவும் தாங்கி இந்த இதழ் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

### 2006 ஆம் ஆண்டிற்கான

## பாடசாலை தவணைகள் கல்வி அமைச்சால் அறிவிப்பு

(வவுனியா செய்தியாளர்)

2006 ஆம் ஆண்டிற்கான பாட சாலை தவணைகளை கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. இதன் போது க.பொ.த உயர்தர பரீட்சை நிலையங்களாக செயற்படும் பாடசாலைகளுக்கான தவணைகள் வேறாகவும் ஏனைய பாடசாலை களுக்கு வேறாகவும் அமைத் துள்ளன. அரச பாடசாலைகள் அனைத் தும் முதலாம் தவணை கல்வி நடவடிக்கைகளுக்காக சனவரி இரண்டாம் திகதி முதல் ஏப்பிரல் ஏழாம் திகதி வரை செயற்படும்.

க.பொ.த உயர்தர பரீட்சை நிலையமாக பயன்படுத்தப்படும் பாடசாலைகள் அனைத்தும் இரண் டாம் தவணை கல்வி நடவடிக்கைக் காக மே மாதம் 22 ஆம் திகதி தொடக்கம் ஒகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி வரை நடைபெறும் க.பொ.த உயர்தர பரீட்சை நிலையமாக பயன்படுத்தப்படாத பாடசாலைகள் அனைத்தும் இரண்டாம் தவணை கல்வி நடவடிக்கைகளுக்காக மே மாதம் எட்டாம் திகதி தொடக்கம் ஒகஸ்ட் மாதம் நான்காம் திகதி வரை நடைபெறும்.அரச பாடசாலைகள் அனைத்தும் மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கைகளுக்காக செப்ரெம்பர் மாதம் நான்காம் திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் எட்டாம் திகதி வரை செயற்படும் எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (10)


## பயிற்சிப் பட்டறை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் சமூக சேவைகள் உத்தியோகஸ்தர்களுக்கான பயிற்சிப் பட்டறையொன்று எதிர்வரும் 19ஆம் திகதியிலிருந்து 21ஆம் திகதி வரை யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

எனவே, சகல சமூக சேவைகள் உத்தியோகஸ்தர்களையும் 19ஆம் திகதி காலை எட்டு மணிக்கு யாழ். செயலகத்திற்கு சமுகமளிக்குமாறு வேண்டப்பட்டுள்ளனர். (சோ)

## வவு. கல்வியியற் கல்லூரியில் பட்டமளிப்பு விழா நிகழ்வு



(வவுனியா செய்தியாளர்)

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் கற்பித்தல் தேசிய டிப்ளோமா பாடநெறியை 2003-2004 ஆம் கல்வியாண்டில் பூர்த்தி செய்தவர்களுக்கான பட்டமளிப்பு விழா வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பல்நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

ஆசிரிய கல்வியியலாளர் பரமேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக பிரயோக விஞ்ஞான பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சிறிகிருஷ்ணராஜா கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினராக கல்லூரி பீடாதிபதி க. பேர்ணாட் கலந்து கொண்டார் கௌரவவிருந்தினர்களாக உபபீடாதிபதிகளான த.இன்பதேவராஜா, கு.சிதம் பரநாதன் சிரேஷ்ட ஆசிரிய கல்வியியலாளர் த. இரவீந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் 2003 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரையான மூன்றாண்டு காலப்பகுதியில் இக் கல்லூரியில் ஆரம்பக்கல்வி உடற்கல்வி, விவசாயம், மனைப் பொருளியல் , இந்து சமயம், கிறிஸ்தவ சமயம் ஆகிய பாடநெறிகளைப் பூர்த்திசெய்த தமிழ், முஸ்லிம் சிங்கள இனங்களைச் சேர்ந்த 177 பேருக்கு பீடாதிபதி க.பேர்ணாட் "கற்பித்தலில் தேசிய டிப்ளோமா" பட்டம் வழங்கி கௌரவித்தார். (10)

## நேர்முகத் தேர்வு

(அலுவலக செய்தியாளர்)

கணித விஞ்ஞான ஆசிரியர்களுக்கான நேர்முகத் தேர்வுகள் எதிர்வரும் 21ஆம்.22.ஆம் திகதிகளில் தமிழீழ கல்விக் கழக நடுவப்பணியகத்தில் நடைபெறவுள்ளது.

கணித ஆசிரியர்களுக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 21ஆம் திகதியன்றும், விஞ்ஞான ஆசிரியர்களுக்கான நேர்முகத்தேர்வு எதிர்வரும் 22ஆம் திகதியன்றும் நடைபெறவுள்ளதெனவும் இவர்களுக்கான அனுமதிக் கடிதங்கள் ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ளதெனவும் தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் தெரிவித்துள்ளார். (சோ)

வரிவிளம்பரம்

புதிய பிரிவுகள் ஆரம்பம்
இணையத்தளங்களை
உருவாக்கக் கூடிய உயர்கற்கை
நெறி
Dreamweaver MX
வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
தொடர்புகட்கு:
வின்நெற் கணனி பயிற்சி நிலையம்
டிப்போவீதி, கிளிநொச்சி
(சி.13074)

## தவறிவிட்டது

முத்தையா சோதீஸ்வரன் என்பவரது தே.அ.அட்டை,பிரயாண அனுமதி அட்டை சாரதி அனுமதிப் பத்திரம் என்பன பேசுடன்கிளிநொச்சிக்கும் முறிகண்டிக் குமிடையில் 15ஆம் திகதி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சி ஈழநாதம் விளம்பரப்பணிமனையில் ஒப்படைக்கவும் சன்மாணம் வழங்கப்படும் தகவல் மு.சோதீஸ்வரன் (7153)

## அறிவித்தல்

ஏற்கனவே ஈழநாதம் பத்திரிகையின் 27.11.2005 ஆம் திகதிய அறிவித்தலுக்கமைவாக கட்டாக்காலியாக நகரத்தில் திரியும் ஆடு, மாடுகள் சபையினால் நியமிக்கப்பெற்ற கால்நடை பிடிப்பவர்களினால் 19.12.2005 ஆம் திகதியில் இருந்து பிடிக்கப் படுமென்பதனைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

எனவே கால்நடைகளின் உரிமையாளர்கள் தங்கள் கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்

சிறப்புஆணையாளர்,
கரைச்சிப்பிரதேசசபை.

(சி.13601)

## அறிவித்தல்

ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கலைப்பீடம்
பத்திரிகையியல் டிப்ளோமா (முழுநேரக்) கற்கை
நெறிக்கான அனுமதி- 2006

மேற்படி கற்கை நெறிக்கான அனுமதித் தேர்வு 18.12.2005 அன்று நடைபெறமாட்டாது 24.12.2005 காலை 9.30 மணிக்கு நடைபெறும். விண்ணப்பதாரிகள் தங்கள் தங்கள் அடையாள அட்டையுடன் வரவேண்டும்

பதிவாளர். (சி.13572)

## பதவி வெற்றிடம்

பிராந்திய கண்ணிவெடியகற்றும் செயற்பாட்டு செயலகத்தில் கீழ் குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கான வெற்றிடங்கள் உள்ளன.

1. Quality Assurance Inspectors
2.Operation Officer

தகைமைகள்:-
1 க.பொ.த சாதாரணதரம் சித்தி.
2.ஆங்கிலப் பேச்சுத்திறன்.
3. கணினி அறிவு.
4. அரச, அரசசார்பற்ற நிறுவனங்களில் வேலையாற்றிய அனுபவம்
5. வயதெல்லை 20-35

மேற்குறிப்பிட்ட விபரங்கள் அடங்கிய உங்கள் சுயவிபரங்களை மார்கழி 27 ஆம் திகதிக்கு முன்னர் எமது அலுவல்கத்திற்கு கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கவும்.

முகவரி:-
பிராந்திய கண்ணிவெடியகற்றும் செயற்பாட்டுச் செயலகம்
A9 சாலை,
கரடிப்போக்கு,
கிளிநொச்சி.

(சி.13573)

## கேள்வி அறிவித்தல்

முல்லை.மாவட்டத்திலுள்ள இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு கீழ் காட்டப்படும் மாதங்களில் நிவாரண விநியோகம் மேற்கொள்வதற்கு தேவையான புழுங்கல் (சிவப்பு) அரிசி வழங்கக்கூடிய இம்மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களிலிருந்து மட்டும் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றது.

| விநியோகிக்கப்பட வேண்டிய காலம் | | விநியோகிக்கப்பட வேண்டிய அளவு |
|---|---|---|
| சனவரி | 2006 | 240 மெற்றிக்தொன் |
| பெப்ரவரி | 2006 | 240 மெற்றிக்தொன் |
| மார்ச் | 2006 | 240 மெற்றிக்தொன் |

இதற்கான கேள்விப்படிவங்களையும் மேலதிக விபரங்களையும் இச்செயலகத்தில் 2006.01.10 ஆம் திகதிவரை பெற்றுக்கொள்ளலாம்.

திட்டப்பணிப்பாளர் (டி.ஆர்.ஆர்.எஸ்.)
அரசாங்க அதிபருக்காக,
முல்லைத்தீவு மாவட்டம். (சி.13568)

# சீன மருத்துவமனையில் தீவிபத்து; 38 நோயாளிகள் பலி ; 50 பேர் காயம்

(பீஜிங்)

சீனாவின் வியோயுவான் நகரில் உள்ள நவீன வசதிகள் கொண்ட மருத்துவ மனையில் ஏற்பட்ட தீவிபத்தில் 38 நோயாளிகள் பலியாகியதுடன், ஐம்பதிற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

மருத்துவமனையில் திடீரென பற்றிய தீ அனைத்துப் பகுதிகளுக்கும் பரவியது. அப்போது மருத்துவ மனையில் 248 நோயாளிகள் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

நோயாளிகள் பலர் வெளியில் ஓடித்தப்பிக் கொண்டனர்.

ஓட முடியாத முதியவர்கள் மற்றும் பெண் நோயாளிகளே பலியாகியுள்ளனர்.

சீனாவில் இந்த ஆண்டில் மட்டும் இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட தீவிபத்துச்சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

- இராணுவ துப்பாக்கிச்சூட்டில் 12 பேர் பலியானதைக் கண்டித்து -

# நேபாளத்தில் வேலைநிறுத்தம்; ஆர்ப்பாட்டம்

## பொலிஸார் - ஆர்ப்பாட்டக்காரர் முறுகல்

(காத்மண்டு)

**நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் நேற்று பொது வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் ஆர்ப்பாட்டப் பேரணியும் நடத்தப்பட்டுள்ளது. இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலிசாருக்குமிடையே முறுகல்நிலை தோன்றியுள்ளது.**

கடந்த புதன்கிழமை ஆலயத் திருவிழா ஒன்றின் போது இராணுவ வீரர் ஒருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 12 பேர் பலியான சம்பவத்தை கண்டித்தே இந்த வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

கடைகளும், பாடசாலைகளும், அலுவலகங்களும் மூடப்பட்டதுடன் போக்குவரத்துச் சேவையும் இடம்பெறவில்லை.

இதேவேளை இக்கொலை நடைபெற்ற இடத்தில் பல்லாயிரக் கணக்கானோர் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேபாள இராணுவத்தினரும் பொலிசாரும் தகுந்த முறையில் பயிற்றப்படாமையால் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வருவதாக மனித உரிமைகள் குழு குற்றஞ்சாட்டியுள்ளது.

இதேவேளை இதுபற்றி நேபாள இராணுவ செய்தித் தொடர்பாளர் கூறுகையில்; நடந்தது மிகவும் துரதிஷ்டவசமான சம்பவம். இது தொடர்பாக உயர்மட்ட இராணுவ விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

# 4 முக்கிய தீவிரவாதிகள் பங்களாதேஷில் கைது

(டாக்கா)

பங்களாதேஷில் ஜாமாதுல் முஜாகிதீன் தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த நான்கு முக்கிய தீவிரவாதிகளை அந்நாட்டுப் பொலிசார் நேற்று முன்தினம் கைதுசெய்துள்ளனர். அவர்களிடம் இருந்து ஏராளமான வெடிபொருட்களும், ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

பங்களாதேஷில் உட்துறை அமைச்சர் லுடிசமான் பபூர் இது தொடர்பாகக் கூறுகையில்;

கைது செய்யப்பட்ட நான்கு தீவிரவாதிகளும் கையெறிகுண்டு, துப்பாக்கி,சக்தி வாய்ந்த வெடிகுண்டுகளைத் தயாரிக்கும் திறமை பெற்றவர்கள். இவர்களிடமிருந்து 28 கையெறிகுண்டுகள்,24 துப்பாக்கிகள், டெட்டனேட்டர்கள், வெடிகுண்டுகள் மற்றும் இஸ்லாமியப் புத்தகங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. பொலிசார் அவர்களிடம் தீவிரவிசாரணை நடத்திவருகின்றனர்.

இதன்மூலம் அந்த தீவிரவாத இயக்கம் குறித்து முக்கிய தகவல்கள் கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம் என்றார்.




ஈராக்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தலின் போது வாக்காளர்கள் சோதனையிடப்படும் காட்சி.

# இந்திய பாராளுமன்றில் பரபரப்பு; பாதுகாப்பு அதிகாரிகள் திடீர் தேடுதல்

(புதுடில்லி)

இந்திய பாராளுமன்ற அங்கத்தவர்கள் பாதுகாப்புக் காரணங்களின் அடிப்படையில் பாராளுமன்ற கட்டடத்திலிருந்து நேற்று வெளியேற்றப் பட்டனர்.

நண்பகல் அளவில் பாதுகாப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டதும் பிரதம மந்திரி மன்மோகன்சிங் அருகிலுள்ள பாதுகாப்பான கட்டடமொன்றிற்குச் சென்றுள்ளார்.

பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் அதன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட சமயத்திலேயே பாதுகாப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அந்தப் பிரதேசத்திலிருந்து சகலரையும் வெளியேற்றிய பாதுகாப்பு அதிகாரிகள் தேடுதல் நடவடிக்கைகளையும் உடனடியாக மேற்கொண்டனர்.

பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் சம்பந்தமாக இந்திய அரசாங்கம் எந்த வித விபரங்களையும் வெளியிடவில்லை. தேடுதல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டதும் பாராளுமன்ற நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்கலாம் என்று பாதுகாப்பு அதிகாரிகள் அறிவித்தார்கள்.

இதனைத் தொடர்ந்து பாராளுமன்ற விவாதங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன.

2001 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி பாராளுமன்ற கட்டடத்தில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

# தவறான சுனாமி எச்சரிக்கையால் பதற்றம்; அமைச்சர் மன்னிப்புக் கோரினார்

– தாய்லாந்தில் சம்பவம்

(பாங்கொக்)

தாய்லாந்தில் தவறான சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இதில் ஐந்துபேர் காயமடைந்தனர். இச்சம்பவம் தொடர்பாக தாய்லாந்து அமைச்சர் மன்னிப்புக்கோரியுள்ளார்.

இது தொடர்பாக தெரியவருகையில்; தாய்லாந்தில் அமெரிக்க நிறுவனம் புதிதாக ஒரு சுனாமி எச்சரிக்கைக் கருவியை அமைத்துள்ளது. அதன் ஊழியர் ஒருவர் அந்தக் கருவியைச் சோதித்துப் பார்க்க விரும்பினார். அந்த ஊழியர் தவறாக அந்தக் கருவியை இயக்கிவிட்டார். இதனால் சுனாமி எச்சரிக்கை கடலோரப் பகுதி முழுவதும் விடப்பட்டது. சுனாமி எச்சரிக்கையைத் தொடர்ந்து கடலோரப் பகுதி மக்கள் அலறியடித்துக்கொண்டு ஓடினார்கள். கடற்கரை நகரங்களில் மக்கள் பீதியில் ஓடியதாலும்,மாடியில் இருந்து சிலர் கீழே குதித்ததாலும் காயமடைந்தனர். இந்தப்பரபரப்புக் காரணமாக போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது. ஐந்துபேர் விபத்தில் காயமடைந்தனர்.

நீண்ட நேரத்துக்குப்பின்பு தான் தவறான எச்சரிக்கை விடப்பட்டதென்பது தெரியவந்தது. நடந்துவிட்ட தவறுக்கு தாய்லாந்து அமைச்சர் சுரானர்க்விஜி ஜிவா பொதுமக்களிடம் மன்னிப்புக் கேட்டார். இதுபோன்ற தவறு இனி மேலும் நடக்காது என்றும் அவர் உறுதியளித்திருக்கிறார்.

தவறான சுனாமி எச்சரிக் கையால் பொதுமக்களுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு நஷ்டஈடு தருவதாக அந்த அமெரிக்க நிறுவனம் அறிவித்துள்ளது.

# இப்படியும் எதிர்க்கலாம்



ஹொங்கொங்கில் நடக்கும் உலக வர்த்தக மாநாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து விக்டோரியா பூங்காவிலிருந்து மாநாடு நடக்கும் மையத்துக்கு தென்கொரிய எதிர்ப்பாளர்கள் நேற்று முன்தினம் பேரணி நடத்தினர். தலையில் கருப்புப்பட்டி அணிந்து மண்டியிட்டு முன்தலையால் தரையைத் தொட்டு எதிர்ப்பைத் தெரிவிக்கின்றனர்.

# புகைபிடித்தலுக்கு எதிராக; ஸ்பெயினில் கடும் சட்ட விதிகள்

(மெட்ரிக்)

புகைபிடித்தால் ஆறுகோடி ரூபா வரை அபராதம் விதிக்கப்படும் என ஸ்பெயின்நாட்டில் புதிய சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

பொதுஇடத்தில் புகைப் பிடிக்க ஏற்கனவே இங்கிலாந்து தடைவிதித்திருக்கிறது. இதேபோல் ஸ்பெயின் நாட்டிலும் பொது இடத்தில் புகை பிடிக்கத்தடை விதிக்கப்படுகிறது. இதற்காக புதிய சட்டம் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது. அனைத்து கட்சிகளுமே புகைக்கு எதிரான இந்தத் தடைச்சட்டத்தை ஆதரிக்கின்றன.

பாராளுமன்றத்தில் இந்தத்தடைச் சட்டம் ஒரு மனதாகநிறைவேறியது.

இதன்படி அரச அலுவலகங்கள், பேருந்து நிலையம், விடுதிகள், பூங்காக்கள், புகையிரத நிலையம், கலாச்சார மண்டபங்கள் ஆகியவற்றில் புகைபிடிக்கக்கூடாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதுபானங்கள் மற்றும் சிகரெட் பிடிக்க அனுமதிக்கப்பட்ட தனி அறைகளில் மட்டுமே புகைபிடிக்க முடியும்.

பொது இடங்களில் சிகரெட் பிடிப்பவர்களுக்கு 600 ரூபா முதல் ஆறு கோடி ரூபாவரை அபராதம் விதிக்கவும் புதிய சட்டம் வகை செய்கிறது.

பதினெட்டு வயதுக்கும் உட்பட்டவர்களுக்குப் புகையிலை பொருட்கள் விற்கக் கூடாது.

சிகரெட் விற்பனை விளம்பரம் செய்யக்கூடாது என்றும் புதிய சட்டம் தடைவிதித்துள்ளது.




அமெரிக்காவில் போக்குவரத்து ஊழியர்கள் தொழிற்சங்கத்திற்கு அதிக அதிகாரம் வழங்குவது தொடர்பான கருத்துக்கணிப்பு இடம்பெற்றது. இதற்கு ஊழியர்கள் சென்றதால் புகையிரதங்களுக்கு ஓய்வு.

# பிரான்ஸில் கைதான தீவிரவாதிகளுக்கு அல்-ஹைதாவுடன் தொடர்பாம்

(பரிஸ்)

பிரான்சில் கைதுசெய்யப்பட்ட 25 தீவிரவாதிகளுக்கும் அல்-ஹைதா அமைப்பிற்கும் தொடர்பு இருப்பதாக பிரான்ஸ் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

நாணூறு பொலிசார் நடத்திய சோதனையில் 25 தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் ஆயுதங்களைக்காட்டி மிரட்டி கொள்ளை அடிப்பவர்கள் என்றும் கொள்ளை அடிக்கும் பணத்தைத் தீவிரவாதிகளுக்கு வழங்கிவந்தனர் என்றும் பொலிசார் தெரிவித்தனர்.

இந்தத் தீவிரவாதிகளிடம் விசாரணை நடத்தியபோது அவர்களுக்கும் ஈராக அல்-ஹைதா தலைவன் அல்-ஜர்க்காவிக்கும் தொடர்பு இருப்பது தெரியவந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

அல்ஜீரியன் இஸ்லாமிய குழுவான சலாபிஸ்ட் பிரான்ஸில் தாக்குதல் நடத்துவதற்காக அல்ஜர்காவியுடன் தொடர்பு கொண்டு இருப்பதாக கடந்த யூலை மாதம் பிரான்ஸ் பொலிசார் எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மன்னாரில் இராணுவ சோதனைகள் அதிகரிப்பு

மன்னார் பேசாலைப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற குண்டுத் தாக்குதலுக்குப் பின்னர் அப் பகுதியில் திடீர் சோதனைகளும் சுற்றிவளைப்புக்களும் நடைபெற்றன.

பேசாலைப் பகுதியில் படையினர் அவ் வழியால் வந்த வாகனங்களை மறித்து மக்களை இறக்கி அடையாளஅட்டைகளை வேண்டிச் சோதனை நடவடிக்கையினை மேற்கொண்டனர். இதே சமயம் மன்னாரிலுள்ள சகல காவல் அரண்களும் பலப்படுத்தப்பட்டுள்ளதால் அப் பகுதி மக்கள் அச்சத்திற்குள்ளாகியுள்ளனர். (18)

# வன்னி வேளாண் தொழில் நுட்ப நிறுவனத்தால் புதிய இயந்திரங்கள் அறிமுகமும் விளக்கமும்

(வட்டக்கச்சி)

**வட்டக்கச்சிப் பகுதியில் வன்னி வேளாண் தொழில் நுட்ப நிறுவனமும். ஜினசேன கம்பனியும். விவசாயத் திணைக்களமும் இணைந்து வட்டக்கச்சி கமநல சேவை நிலையத்தில் புதிய இயந்திரங்களை அறிமுகப்படுத்தின.**

பெரும்பாக உத்தியோகத்தர் கதிர்காமநாதர் தலைமையில் இது நடை பெற்றது. இவ் அறி முகப்படுத்தலில் புதிய வகை உந்துருளிகள், அறு வடை செய்யும் இரு சக்கர உழவு இயந்திரம், வேப்பம் குழை, இலுப்பங் குழை போன்றவற்றை அரைக்கும் கருவிகள், சூடு அடிக்கும் இயந்திரம் என்பன அறிமுகப்படுத்தி மக்களுக்கு விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

நிகழ்வில் வன்னி வேளாண் தொழில் நுட்ப நிறுவன முகாமையாளர் புவனேஸ்வரன் விவசாய பாடவிதான உத்தியோகத்தர் செல்வராசா பெரும்பாக உத்தியோகத்தர் கதிர்காமநாதர் ஆகியோர் கலந்து கொண்டனர். மற்றும் விவசாயம் சம்பந்தமான வினாடிவினாப் போட்டி நடைபெற்று அதில் வெற்றி பெற்ற வர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. (12)

## வெளியீட்டுவிழா

(அலுவலகசெய்தியாளர்)

கல்லடி றொபேட் எழுதிய "சிறையில் பூத்த உணர்வின் ஒளி" கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா கிளிநொச்சியில் நடை பெறவுள்ளது.

எழுகலை இலக்கியப் பேரவையினரின் ஏற்பாட்டில் வெளியிடப்படும் இந்தச் சிறையில் பூத்த உணர்வின் ஒளிக்கவிதை தொகுதி நாளை மாலை 3.30 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது .(கு)

## 'தையல் பயிற்சி நெறி'

(அலுவலக செய்தியாளர்)

திருமுறிகண்டி பிரதேச தேசிய இளைஞர்சேவை மன்றத்தினால் 2006 ஆம் ஆண்டு தைமாதம் முதல் வாரத்தில் தையல் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

திருமுறிகண்டி, இந்துபுரம் கிராம அலுவலர் பிரிவிலுள்ள யுவதிகள் மேற்படி பயிற்சி நெறியில் கலந்து கொள்ளலாமெனத் திருமுறிகண்டி இளைஞர் சேவை மன்றத்தினர் தெரிவித்துள்ளனர். (சோ)

## தரம் – Iக்கு பதவி உயர்த்த விண்ணப்பம் கோரல்

(அலுவலக செய்தியாளர்)

வைத்திய சேவையிலுள்ள அரச தாதி உத்தியோகத்தர்களை தரம் ஒன்றிற்கு உயர்த்துவதற்கான விண்ணப்பங்களை அரச வைத்தியசாலைகளில் பணிபுரியும் தாதியர்களிடமிருந்து சுகாதார அமைச்சினால் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகள் தாதிய சேவையில் உறுதிப்படுத்தப்பட்டவராகவும், பயிற்சி விலக்காக தாதியர் சேவையில் நான்கு வருடம் பூர்த்தி செய்தவராகவும், மருத்துவசபையில் பதிவு செய்யப்பட்டவராகவும், 48 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல்வேண்டுமெனவும் தகுதியுடைய தாதியர்கள் மேற்படி விண்ணப்பங்களை 20.12.2005இற்கு முன்னதாக அனுப்பிவைக்கும் படியும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது கிளி,முல்லை மாவட்டத்தில் பணிபுரியும் தாதியர்கள் மேற்படி விண்ணப்பத்தினை கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை தாதியர் பரிபாலகர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாமெனவும் தெரிவிக்கப்பெற்றுள்ளது. (சோ)


## களமுனைப் போராளிகளைச் சந்திப்பு

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் வடக்குக்கிழக்கு முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தினரின் வழிகாட்டலில் முல்லை. மாவட்ட முன்பள்ளிக் கல்வி நிலையத்தினரின் ஏற்பாட்டில் முல்லை பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களும், மேற்பார்வையாளர்களும், இணைந்து மணலாற்றுக் களமுனைக்கு கடந்த வியாழனன்று சென்று கலந்துரையாடியுள்ளனர்

தமிழீழ கடற்படை அரசியல் துறைப் பொறுப்பாளரின் ஒழுங்குபடுத்தலில் அங்கு சென்ற இவர்கள் முன்னரணில் நின்ற போராளிகளுடன் கலந்துரையாடியுள்ளதுடன் அவர்களிற்கு உலர் உணவுப் பொதியினையும் வழங்கியுள்ளனர். களமுனையில் கொக்குத்தொடுவாய் பகுதியில் காவலரணுக்குப் பொறுப்பாக உள்ள றீகன் தமிழீழக் கடற்படை சார்பாகஅங்கு நின்ற இசையமுதன் உட்பட தமிழீழ தேசிய துணைப் படை வீரர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினார்கள். முன்னதாக தமிழீழ கடற்படைத்தளபதி மங்களேசு டன் தாம் வருகை தந்த நோக்கம் தொடர்பாக மேற்பார்வையாளர் தெரிவித்தார். தொடர்ந்து தமிழீழ கடற்படைத் தளபதி கருத்துத் தெரிவிக்கையில் இவ்வாறான சந்திப்புக்கள் தொடர்ச்சியாக நடைபெற வேண்டுமெனவும் போராளிகளுக்கு உற்சாக மூட்டும் வகையில் இவ்வாறான அமைப்புக்கள் அனைத்தும் செயற்பட முன்வரவேண்டும் எனவும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.(20)

## நந்திக்கடலில் சல்பீனியாத் தாவரப் பரம்பல்

முல்லைத்தீவிலுள்ள நந்திக் கடலில் சல்பீனியா எனும் நச்சுத் தாவரம் பரவுவதால் இங்குள்ள இயற்கை வளங்கள் பாதிப்படைகிறது. பறவைகள் சரணாலயமாக இருக்கும் இதில் அச் சரணாலயம் பாதிப்படைவதோடு மீன், இறால் உற்பத்தியும் குறைந் துள்ளதாக முல்லை மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். (20)



கிளிநொச்சி பிரதம தபாலகத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் ஏற்பட்ட வீதி விபத்தின்போது உந்துருளியில் பயணித்த றதீஸ் (வயது – 26) என்பவர் படுகாயமடைந்துள்ளார். அவர் பயணித்த உந்துருளி உழுபொறியுடன் மோதுண்டு வீதியில் கிடப்பதைப் படத்தில் காணலாம்.

(படம் – குகன்)

# காலங்கடந்த பதிவுகளை மேற்கொள்ள பூநகரி செயலகத்தில் நடவடிக்கை

(பூநகரி)

இன்று பூநகரி பிரதேச செயலகத்தில் பூநகரிப் பிரதேச செயலர் மா.சிறீஸ்கந்தகுமார் தலைமையில் காலங்கடந்த இறப்பு, பிறப்பு, திருமணப் பதிவுகள் இடம் பெறவுள்ளது.

இச் செயற்பாட்டிற்கு உதவுவதற்காக யாழ்ப்பாண உதவிப் பதிவாளர் நாயகம் வருகை தரவுள்ளார்.

காலஞ்சென்ற பிறப்புப் பதிவுகளை மேற்கொள்வோர் அவர்களுடைய தாயையும், தந்தையையும் அழைத்து வரவேண்டும் அத் துடன் குழந்தையின் பிறப்பை உறுதிப்படுத்து வதற்குரிய சாதகம், குறிப்பு, கிளினிக் கொப்பி, மருத்து விச்சியின் கடிதம் பாடசாலை மாணவர் ஆயின் உறுதிப்படுத்தப்பட்ட அதிபரின் கடிதம் ஆகியவற்றில் ஏதேனு மொன்றை கொண்டு வரவேண்டும்.

நடுப்பிள்ளையாயின் இவருக்கு முன், பின் உள்ள பிள்ளைகளின் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் எடுத்து வரப்பட வேண்டும்.

இச் செயற்பாடு காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 5.00 மணி வரை இடம்பெறும் என்று தெரிவிக்கப்படுகிறது. (34)

# மாணவர் நலன் கருதி மாலை நேர வகுப்புக்கள்

மன்னார் மாவட்டத்தின் பாப்பா மோட்டை கிராமத்தின் பாப்பா மோட்டை அ.த.க பாடசாலையில் கல்வி கற்கும் ஒன்பதாம் ஆண்டுக்குட்பட்ட மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்தும் நோக்கில் மன்னார் மாவட்ட தமிழீழ நிர்வாக சேவை மாலை நேர வகுப்புக்களை ஒழுங்குபடுத்தியுள்ளது.

நேற்றுமுன்தினம் பிற்பகல்3.30 மணிக்கு மன்னார் மாவட்ட தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் சர்வன் வகுப்புக்களை ஆரம்பித்து வைத்தார்

தொடர்ந்து சிராம சேவையாளர் நிமால் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மன்னார் அடம்பன் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் றொபேட், மன்னார் மாவட்ட த.நி.சே பொறுப்பாளர் சர்வன், மன்னார் மாவட்ட கொள்கை முன்னெடுப்பு பொறுப்பாளர் வதனன், மன்னார் மாவட்ட த.நி.சே காணிப் பகுதிப் பொறுப்பாளர் இளம்புலி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

அன்று சமுகமளித்திருந்த மாணவர்களுக்கு குடைகள் வழங்கி ஊக்குவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் வகுப்புக்கள் நடைபெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## வட்டக்கச்சிப் பிரதேச கமக்கார அமைப்புக்களுடனான சந்திப்பு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி பிரதேச கமக்கார அமைப்புக்களுக்கான சந்திப்பொன்று கடந்த புதன்கிழமை மாலை 3.00 மணிக்கு கமநல சேவை நிலையத்தில் பிரதேச இணைப்பாளர் றொஜிட் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பெரும்பாக உத்தியோகத்தர் கதிர்காமநாதர், விவசாய போதனா ஆசிரியர் பிரபாகரன் கமக்கார அமைப்பின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். அத்தோடு கருத்துரைகளை பிரதேச இணைப்பாளர் றொஜிட் பெரும்பாக உத்தியோகத்தர் கதிர்காமநாதர் ஆகியோர் கமக்கார அமைப்புக்களின் செயற்பாடுகள் திட்டமிடல்கள் ஆகியன தொடர்பான முக்கிய விடயங்கள் ஆராயப்பட்டது. வட்டக்கச்சிப் பிரதேசத்தில் காலபோக நெற் செய்கையினை இடைப்போகமாக மேற்கொள்வது பற்றிய ஆலோசனைகள், திட்டமிடல்கள் போன்ற செயற்பாடுகள் பற்றியும் இக்கலந்துரையாடலில் ஆலோசிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (12)

## நீண்ட காலமாக புனரமைப்புச் செய்யாது நீர்ப்போக்கி



பரந்தன் புதுக்குடியிருப்பு பிரதான வீதியில் பரந்தனிலிருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்தில் விதியில் நீண்ட காலமாக புனரமைப்பு செய்யப்படாமல் இருக்கும் நீர்ப் போக்கியையே படத்தில் காண்கிறீர்கள். இந்த நீர்ப்போக்கி அமைந்திருக்கும் இடத்தில் பாரிய கிடங்குகள் ஏற்பட்டு மழை நீர் வழிந்தோட முடியாமல் உள்ளதுடன் அதிகரித்த போக்குவரத்துக்கள் உள்ள விதியில் அவ்விடம் போக்குவரத்திற்கு பெரும் இடையூறாகவும் அமைந்துள்ளது.

## செயலமர்வு

தரம்-8 புவியியல் வரலாறு, குடியுரிமைக்கல்வி புதிய கலைத்திட்ட செயலமர்வு வரும் 19,20 ஆகிய தினங்களில் காலை 8.30- மாலை 4.30 மணிவரை வலயக்கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் நடை பெறவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். இவ் வலயத்திற்குட்பட்ட பாடசாலை அதிபர்கள் தங்கள் பாடசாலைகளிலிருந்து மூன்று ஆசிரியர்களைத் தவறாது அனுப்பி வைக்குமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

# யாழ்.எழுவைதீவு இறங்குதுறையை புனரமைக்க கடற்படை தடை விதிப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ். எழுவைதீவு இறங்குதுறையை புனரமைப்புச் செய்வதற்கு சிறிலங்கா கடற்படை தடை விதித்துள்ளது.**

நீண்ட காலமாக புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் காணப்படும் எழுவைதீவு இறங்கு துறையை தொண்டு நிறுவனம் ஒன்றின் நிதியுதவியுடன் புனரமைப்புச் செய்ய அண்மையில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எழுவைதீவு கடற்றொழிலாளர்களதும், ஏனைய தீவுப் பகுதிகளில் இருந்தும் இங்கு வந்து செல்லும் பயணிகளினதும் நலன் கருதியும், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதனடிப்படையில் எழுவைதீவு இறங்குதுறையைப் புனரமைக்கும் நடவடிக்கைகள் கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டபோது அங்கு வந்த கடற்படையினர் இறங்குதுறை புனரமைப்பைக் கைவிடுமாறு கூறினர்.

மேற்படி இறங்குதுறை புனரமைப்பு எழுவை தீவில் நிலை கொண்டுள்ள கடற்படையினரது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாவதால் இந் நடவடிக்கைகளை உடன் கைவிட வேண்டும் என நிர்ப்பந்தித்ததுடன் கடற்படையின் உயர் அதிகாரிகளின் அனுமதி பெற்று இறங்கு துறையை புனரமைக்குமாறும் கூறினர். இதனால் புனரமைப்புப் பணிகள் கைவிடப்பட்டன. (33)

# கழிவுகளையும், குப்பைகளையும் அழிப்பதற்கு யாழ்.மாவட்ட பிரதேச சபைக்கு நெருக்கடி

யாழ். மாவட்டத்தில் இருக்கும் பிரதேச சபைகள் பல தம்மால் அகற்றப்படும் கழிவுகளையும், குப்பை கூழங்களையும் கொட்டி அழிப்பதற்கு போதிய காணி வசதிகள் அற்ற நிலையில் உள்ளன.

இதனால் பிரதேச சபைகள் தம் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இருந்து அகற்றும் குப்பை கூழங்களையும் கழிவுப் பொருட்களையும், கைவிடப்பட்ட தனியார் காணிகளிலும், அரச காணிகளிலும், மயானங்களிலும், மைதானம் போன்றபொது இடங்களிலும், கொட்டி அழிக்கின்றன.

இதனால் பல சமூகப்பிரச்சினைகளும், சுகாதாரப் பிரச்சினைகளும் தோன்றியிருப்பதால் தம்மால் அகற்றப்படும் கழிவுகளைக் கொட்டி அழிப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து தருமாறு பிரதேச சபைகளின் செயலாளர்கள் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வி. இராசையாவிடம் முறையிட்டுள்ளனர். (33)

# யாழ். மண்டைதீவு கடற்கரை வீதியை திறந்து விட மக்கள் கோரிக்கை

யாழ். மண்டைதீவு கடற்கரை வீதியை திறந்து மக்கள் பாவனைக்கு விடுமாறு அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மண்டைதீவானது தற்போது இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயமாகக் காணப்படுகின்ற போதும் அங்கு சில பகுதிகளில் மாத்திரம் பொது மக்களை மீளக் குடியமர படையினர் அனுமதித்துள்ளனர்.

எனினும் மண்டைதீவில் இருந்து ஏனைய தீவுப்பகுதிகளுக்கு செல்வதற்கான கடற்கரை வீதியைத் திறந்து மக்கள் பாவனைக்கு படையினர் விடவில்லை.

இதனால் மண்டைதீவிலிருந்து ஏனைய தீவுப்பகுதிகளுக்குச் செல்லும் போது பல மைல்கள் தூரம் அதிகமாகவுள்ள மாற்று வழிகளைப் பயன்படுத்த வேண்டிய நிலைமை காணப்படு கின்றது.

இதனால் ஏற்படும் பயணச் சிரமங்களைக் காரணம் காட்டியே அப்பகுதி மக்கள் மண்டைதீவில் நிலைகொண்டுள்ள சிறிலங்காக் கடற்படை அதிகாரிகளிடம் மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளனர். (33)

# யாழ்ப்பாணம்- தீவகத்துக்கான பிரதானவீதி மோசமாகப் பாதிப்பு

யாழ். குடாநாட்டில் அண்மையில் பெய்த கனமழை மற்றும் வெள்ளத்தினால் யாழ்ப்பாணம் -தீவகத்துக்கிடையிலான பிரதான வீதி பல இடங்களிலும் சேதமடைந்து காணப்படுகின்றது.

யாழ். தீவகப் பகுதிகளில் பெய்த கன மழையினால் ஏற்பட்ட வெள்ளம் வீதிகளுக்கு குறுக்கே பாய்ந்ததினால் வீதிகள் கடுமையாகச் சேதமடைந்து உருக்குலைந்துபோயுள்ளன.

தீவகத்திலுள்ள வீதிகளில் உரிய இடங்களில் வெள்ள நீரை கடலுக்குள் பாய்ச்சுவதற்கு ஏற்ற வகையில் மதகுகள், பாலங்கள், வடிகால்கள் என்பன அமைக்கப்படாததனாலேயே இவ்வாறு வெள்ள நீர் வீதிகளுக்குக் குறுக்காகப் பாய்ந்து கடலுக்குச் செல்கின்றது.

இவ்வாறு வீதிகளுக்குக் குறுக்காக மழை வெள்ளம் பாய்ந்ததினால் வீதிகள் சேதமடைந்து போயுள்ள காரணத்தால் பொது மக்கள் தமது போக்குவரத்தின் போது பல வகைச் சிரமங்களையும் அனுபவிக்கின்றனர். (33)

# வாகனச்சாரதிகள் பொதுமக்கள் சிரமம்

சுன்னாகம் நகரப் பகுதியில் பல மாதங்களாக சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தினர் மேற்கொண்டு வரும் வேலைகள் காரணமாக பொது மக்களும் வாகனங்களில் செல்வோரும் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளார்கள்.

கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக நகரப் பகுதியில் பாரிய கிடங்குகள் வெட்டப்படுவதினாலும், அவைகள் குறிப்பிட்ட காலத்தில் மூடப்படாமல் கிடப்பதாலும், போக்குவரத்துச் செய்வதில் சிரமங்கள் காணப்படுகின்றன.

வீதியின் ஓரங்களில் இணைப்புக்களுக்கான வயர்கள் பொருத்தப்பட வெட்டிய கிடங்குகளும் உரிய முறையில் மூடப்படாமையால் வாகனங்கள் மழை காலத்தில் புதையும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். (41)

# கண்வைத்திய நிபுணர் இல்லாமை யாழ். குடாநாட்டில் நெருக்கடி

## யாழ். மாவட்ட சுகாதாரத் திணைக்களம்

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றுவதற்கு போதியளவு கண் வைத்திய நிபுணர்கள் இல்லாமை பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருப்பதாக யாழ். மாவட்ட சுகாதாரத் திணைக்களம் கூறுகின்றது.

யாழ். மாவட்டத்தைப் பொறுத்த வரையில் சுமார் இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான கண் சம்பந்தப்பட்ட நோயாளர்கள் உள்ளனர்.

எனினும் இவ்வாறான கண் சம்பந்தப்பட்ட நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கான ஒரு சில கண் வைத்திய நிபுணர்கள் மாத்திரமே யாழ். மாவட்டத்தில் கடமையாற்றி வருகின்றனர்.

இந் நிலைமை காரணமாக யாழ். மாவட்டத்தில் இருக்கின்ற கண் சம்பந்தப்பட்ட நோயாளர்களுக்கு திருப்திகரமான கண் சம்பந்தப்பட்ட நிபுணத்துவ சேவைகளை வழங்குவதில் பல நெருக்கடிகள் தோன்றியிருப்பதாக சுகாதார திணைக்களம் மேலும் அறிவித்துள்ளது.

இதனால் பெருந்தொகையான நோயாளர்கள் பாதிக்கப்படுவதாகவும், சுட்டிக்காட்டப்படுகின்றது. (33)

# தொழில் வழிகாட்டல் ஆளுமை விருத்திக்கான செயலமர்வு

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் பாடசாலையை விட்டு விலகிய க.பொ.த (உ/த) க.பொ.த (சா.த) பரீட்சைகளுக்குத் தோற்றிய மாணவர்களுக்கான தொழில் வழி காட்டல் ஆளுமை விருத்திக்கான செயலமர்வு வரும் 20.12.2005 காலை 9.00-4.30 மணிவரை மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்திலும், 24.12.2005 காலை 9.00-430 மணிவரை கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தி யாலயத்திலும், நடைபெறவிருப்பதாக தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதில் பங்கேற்றுப் பயனடையுமாறு கேட்கப்படுகின்றனர். (28)

# கொழும்புத்துறைக் கடற்கரையில் இருக்கும் அதியுயர் பாதுகாப்பு வலயத்தை அகற்றக்கோரிக்கை

யாழ். கொழும்புத்துறைக் கடற்கரையில் இருக்கின்ற இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுமாறு அப்பகுதி தும்புத் தொழிலாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கொழும்புத்துறைக் கடற்கரையை அண்டி வாழும் ஏராளமானோர் தேங்காய் உரிமட்டைகளை கடல் நீரில் ஊறவிட்டு அதனை தும்பாக அடித்தெடுத்து தும்பு மூலமான உற்பத்திப் பொருட்களை செய்து விற்பனை செய்து வாழ்க்கை நடத்தும் தும்புக் கைத்தொழிலாளர்கள் ஆவர்.

எனினும் கொழும்புத்துறை கடற்கரைப்பிரதேசமானது இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயமாக உள்ளதால் இங்கு தும்பு அடிப்பதற்காக தேங்காய் உரிமட்டைகளை ஊறவிட கடற்கரைக்குச் செல்வோர் மீது படையினர் பலத்த கெடுபிடிகளைப் புரிந்து [illegible]கின்றனர்.

இதனால் தமது இயல்பான தும்புக்கைத்தொழில் பாதிக்கப்பட்டுள்ளமையைக் காரணம் காட்டியே அப் பகுதியைச் சேர்ந்த அமைப்புக்கள் மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளன.

# அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் வலிகாமம் வடக்கு பிரதேசசபை

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலிகாமம் வடக்கு பிரதேச சபையானது அடிப்படை வசதிகள் எதுவும் அற்ற தற்காலிக கட்டடம் ஒன்றிலேயே இயங்கி வருவதால் இப் பிரதேச சபையின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாக வலிகாமம் வடக்கு பிரதேச சபை செயலாளர் திருமதி எஸ். மாணிக்கம் கூறினார்.'

வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்குச் சொந்தமான கட்டடம் தெல்லிப்பழையில் உள்ள போதும் அது இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத்துள் முடக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக வலி. வடக்கு பிரதேச சபையானது மல்லாகத்தில் இருக்கும் தற்காலிகக் கட்டடம் ஒன்றில் இயங்கி வருகின்றது. எனினும் இத்தற்காலிக கட்டடம் பிரதேச சபையின் சேவைக்கு போதியளவு வசதிகள் அற்றதாகக் காணப்படுகிறது. இதனால் சபையின் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன என அவர் மேலும் கூறினார். (33)

# முழு நேர பொறியியல் தொழில் நுட்பப்பயிற்சி டிப்ளோமா நெறிக்கான விண்ணப்பம் கோரல்

கல்வி அமைச்சின் கீழ் உள்ள இலங்கை உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவனத்தில் நடத்தப்படும் முழு நேர உயர் தேசிய பொறியியல் தொழில் நுட்ப டிப்ளோமா பயிற்சிநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மூன்று ஆண்டுகள் கொண்ட இப் பயிற்சிநெறிக்கு க.பொ.த உயர்தரப் பரீட்சை பழைய பாடத்திட்டத்தில் பிரயோக கணிதம், தூய கணிதம், பௌதீகவியல்,இரசாயனவியல் ஆகிய நான்கு பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்தவர்களும், க.பொ.த உயர்தரப் பரீட்சை புதிய பாடத்திட்டத்தில் பௌதீகவியல், இரசாயனவியல், இணைந்த கணிதம் ஆகிய மூன்று பாடங்களில் சித்தி அடைந்திருப்பதுடன் க.பொ.த சாதாரணதரத்தில் ஆங்கிலத்தில் சித்தியும் அடைந்திருப்பதுடன் 23 வயதிற்கு குறைந்தவர்களாகவும், இருத்தல் வேண்டும். இப் பயிற்சிநெறியானது மெக்கானிக்கல், சிவில், எலக்ட்ரிக்கல் ஆகிய மூன்று துறைகளிலும் இடம்பெறவுள்ளன. (41)

# டிப்ளோமா பயிற்சிநெறிக்கான விண்ணப்பம் கோரல்

இலங்கைஉல்லாசப் பயணத்துக்கான அமைச்சின் கீழ் இயங்கும் இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் விடுதி முகாமைத்துவ நிறுவனம் நடத்தும் உபசார முகாமைத்துவ டிப்ளோமா பயிற்சிநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த உயர்தரத்தில் இரண்டு பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் க.பொ.த சாதாரணதரத்தில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும், உயர்தரத்தில் ஆங்கிலத்தில் சித்தியும் பெற்றிருக்க வேண்டும்.

மூன்று வருடங்களைக் கொண்ட இப் பயிற்சி நெறிக்கு மேற்கூறப்பட்ட தகைமைகளுடன் 24 வயதிற்கு உட்பட்ட இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

இம் மாதம் 20 ஆம் திகதி விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி ஆகும் விண்ணப்பங்களை இல 78, காலிவீதி, கொழும்பு 03இற்கு தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும். (41)

# செல்லிடத்தொலைபேசியில் தொலைக்காட்சி பார்க்கலாம்

தற்போது செல்லிடத்தொலைபேசி மக்கள் வாழ்க்கையில் இன்றியமையாத முக்கிய பகுதியாகிவிட்டது. தொலைபேசி, குறுந்தகவல் அனுப்புவது,படம் எடுப்பது,தொலைபேசி இலக்கத்தை சேமிப்பது போன்ற திறன்கள் செல்லிடத்தொலைபேசிக்கு உள்ளன. அறிவியல் தொழில் நுட்பத்தின் வளர்ச்சியுடன் தற்போது சீன மக்களைப் பொறுத்தவரை, செல்லிடத்தொலைபேசி வேறு புதிய திறன் கொண்டுள்ளது. அதாவது அதன் மூலம் மக்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சியைப் பார்க்க முடியும்.


YNET.COM


இதுபற்றி செல்லிடத்தொலைபேசி நிகழ்ச்சி தயாரிப்பதற்குப் பொறுப்பான பெய்சிங்லேஸ் நிறுவனத்தின் தலைமை மேலாளர் லியுஹொன் கூறியதாவது; திரைப்படத்தை ஐந்து பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு பிரதிக்கும் ஐந்து நிமிடம் ஒதுக்கிசெல்லிடத்தொலைபேசி மூலம் நிகழ்ச்சிகளைக் கண்டுகளிப்பதற்கு ஏற்ப வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஏனென்றால் செல்லிடத் தொலைபேசியின் திரைசிறியது. திரையை நீண்ட நேரம் பார்த்தால் கண்களுக்குக் களைப்பு ஏற்படும். ஆகவே ஒரு பகுதிக்கு ஐந்து நிமிடம் என்ற கணக்கில் திரைப்படம் தயாரிப்பது செல்லிடத்தொலைபேசியைப் பயன்படுத்துவோருக்கு வசதி தரும் என்றார் அவர்.



அமெரிக்க, யப்பான்,தென்கொரியா மற்றும் சில ஐரோப்பிய நாடுகளில் செல்லிடத்தொலைபேசி தொலைக்காட்சி வசதி என்பன நன்கு வளர்ச்சி அடைந்த ஊடகமாகச் சாதாரண மக்களின் வாழ்க்கையில் இடம்பெறுகின்றது. விமானத்திற்காக காத்திருக்கும் கூடத்திலும் உணவு விடுதிகளிலும் மக்கள் செல்லிடத் தொலைபேசி மூலம் தொலைக்காட்சி பார்ப்பதை அடிக்கடி காணலாம்.

சீனாவில் மக்கள் செல்லிடத்தொலைபேசியைப் பயன்படுத்துவதில் பழையதை மாற்றிப் புதியது வாங்கும் போக்குக் காணப்படுகின்றது. இரண்டு ஆண்டுகளுக்கு முன் சீனாவில் வண்ணத்திரை கொண்ட செல்லிடத்தொலைபேசி குறைவு,விலையும் அதிகம் .இப்போது வீடியோ வசதி கொண்ட செல்லிடத்தொலைபேசி விற்பனை விழுக்காடு சந்தையில் அதிகமாகவுள்ளது. அதன் விலையும் 2000 யுவான் ஆக ..க்கின்றது. ஆகவே எதிர்காலத்தில் தொலைக் காட்சி நிகழ்ச்சி காணும் வசதியுடைய செல்லிடத்தொலை பேசி சீன மக்களின் வாழ்க்கையில் ஒரு வழக்கமாக மாறிவிடும்

# நச்சுப்பொருளை வெளிவிடும் திமிங்கலம்



ஆர்டிக் கடற்பரப்பில் நோர்வேக்கு அண்மையில் ஒரு வகை நச்சுப்பொருளை வெளிவிடும் திமிங்கல மீன் இனத்தை நோர்வே விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இவை சூழலை அசுத்தப்படுத்துவதில் துருவக்கரடியைவிட முன்னிலை வகிப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இந்தவகை திமிங்கலம் வெளியிடும் இரசாயனப் பொருள் மனிதனால் உருவாகும் செயற்கை இரசாயனப் பொருளைவிட ஆபத்தானவை எனத் தெரிவிக்கப்படு கிறது.

இந்த மீன் இனம் வெளிவிடும் இரசாயனப் பொருளை பரிசோதனை செய்த அதிகாரிகள் இது பல தொழிற்சாலை களில் பாவிக்கப்படும் களைகொல்லியாகவும்,எரிவாயுவாகவும் பயன்படுத்தப்பட முடியும் எனத் தெரிவிக்கின்றனர்.

இந்த இரசாயனப் பொருள் தொடர்பில் ஆய்வாளர்கள் கடல்சார் தொழில்களுக்கும் எனைய உயிரினங்களுக்கும் இது தீமை பயக்கும் என்பதால் கவலைகொண்டுள்ளனர்.

# 800 வகையான வனவிலங்குகள் அழிவுறும் அபாயநிலையில்


உலகில் பரவலாக நடத்தப்பட்ட ஆய்வுக ளிலிருந்து முக்கியமான சில உயிரினங்கள் முற்றாக அழிந்துவிடும் அச்சுறுத்தல் ஏற்பட் டிருப்பது அறியப்பட்டுள்ளது.

மேற்படி இயற்கை வளங்களைப் பாது காக்கும் குழு வெளியிட்டுள்ள பட்டியலின் படி 800 வகைப் பறவைகளும் விலங்குகளும் பேணிப்பாதுகாக்கப்படாவிட்டால் எதிர்காலத்தில் முற்றாக அழிந்துவிடும் எனத் தெரிவிக்கப் படுகின்றது.


இந்த 800வகை உயிரினங்கள் அயன வலயத்தில் மட்டும் குறிப்பிட்ட இடங்களில் காணப்படுவதாகவும், இவற்றைப் பாதுகாக்க வருடந்தோறும் ஆயிரக்கணக்கான டொலர்கள் செலவிடப்படுவதாகவும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இவற்றுள் அனேகமானவை தனிப்பட்ட மனித சஞ்சாரமற்ற காடுகளில் மனிதனின் தாக்கத்துக்குட்படாமல் வசிப்பதாகத் தெரிவிக் கும் விஞ்ஞானிகள் இவற்றைப் பாதுகாக்க வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரிகள் முயற்சிக் காவிடில் இவை முற்றாக அழிந்துவிடும் என ஆராய்ச்சியாளர் ஸ்டுவர்ட் புச்சர்ட் தெரிவிக் கின்றார்.

எனினும் சில உயிரினங்கள் மனிதனுக்கு அச்சுறுத்தலாக இருப்பதையும் இவற்றின் தன்மை பற்றி இன்னும் அறியப்படவில்லை என்றும்







தெரிவிக்கப்படுகிறது. இவற்றுள் 95 வீதமானவை பிரபலமானவை எனத் தெரிவிக்கப்படுகிறது.

மடகஸ்காரில் விலங்குகளைப் பாதுகாக்க மக்களுக்கு ஊக்குவிப்பு அளிக்கப்படுவதாக வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரியான ஜோன்பா தெரிவிக்கிறார். அங்கு வனவிலங்குகள் வளர்ப்பு மிருகங்களாக அறிமுகமாகின்றன. அவற்றுள் பிக்மிக்களின் பன்றியும் அசாம் ஆமைகளும் அடங்கும்.

எனினும் இவ்வகை அரிதான விலங்குகள் இன்னும் எவ்வளவு காலம் உயிர்வாழும் என்பது கூறமுடியாது என்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

# சிம்பன்ஸி-மனிதன் டி.என்.ஏ.96 வீதம் ஒற்றுமை



மனிதனுக்கும் சிம் பன்ஸி குரங்குக்கும் இடையே 96 விழுக்காடு டி.என்.ஏ வரிசையில் கச்சிதமான ஒற்றுமை இருப்பதாக சர்வ தேச விஞ்ஞானிகள் குழு ஒன்று அண்மையில் அறிக்கை அளித்துள்ளது.

ஒரு சிம்பன்ஸி குரங் கின் முழுமையான மரபணு வரிசை தொகுக்கப்பட்டு இந்த ஆய்வு நடத்தப்பட்டது. அமெரிக்காவின் ஜார்ஜியா மாகாணத்திலுள்ள அட்லாண்ட்டாவின் ஆராய்ச்சி மையத்தில் கடந்த ஆண்டு மாரடைப்பால் இறந்துபோன கினின்ட் என்ற 24 வயது சிம்பன்ஸி குரங்கு தற்போது தனது டி.என்.ஏ மரபணு வகைப்படுத் தப்பட்டதன் மூலம் அறிவியல் ஆய்வுக்கான தகவல் களஞ்சியமாக உயிவாழ்கின்றது. உலகில் மனிதர்கள், சுண்டெலி,எலி ஆகியவற்றுக்கு அடுத்தபடியாக இப்போது முழுமையான மரபணுவரைபடம் தந்த நான்காவது பாலூட்டியாக சிம்பன்ஸி மனிதக் குரங்காகியுள்ளது.

இதற்கிடையில் முதன்முறையாக சிம்பன்ஸி குரங்கின் புதைபடிவுகள் கிழக்கு ஆபிரிக்காவில் கண்டெடுக்கப்பட்டிருப்பதாய் செய்தி கிடைத்துள்ளது. சீன்யாவில் உன்னரிபஃட் பள்ளத்தாக்கில் கிடைத்த மூன்று பற்களின் புதைபடிவுகள் அவை சுமார் ஐந்து இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு வசித்த ஒரு சிம்பன்ஸி குரங்கினுடையது என்று கலிபோர்னியா அறிவியல் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் நீனா ஜப்லோன்ஸ்கி தமது ஆராய்ச்சி மூலம் நிரூபித்துள்ளார். மனிதனும் சிம்பன்ஸியும் 50 இலட்சம் முதல் 80 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு பொதுவான மூதாதையரிடம் இருந்து தோன்றிய பிறகு சேர்ந்து வாழவில்லை என்ற கருத்து இந்தக் கண்டுபிடிப்பால் அடிபட்டுப்போனது.



# புற ஊதாக்கதிர்களால் 'கற்றாக்' கண்நோய் ஏற்படும் அபாயம்

ஓசோன் படலத்தில் ஏற்பட்டுள்ள ஓட்டையினால் சூரியனிலிருந்து பூமிக்கு வரும் புறஊதாக் கதிர்களால் கண்ணில் கற்றாக்நோய் ஏற்படும் வாய்ப்பு அதிகரித்துள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது. பூமியைச் சுற்றி பாதுகாப்புக் கவசம் போல செயற்படுவது ஓசோன் படலம். வளி மண்டலத்திலுள்ள இந்த ஓசோன் படலம், சுற்றுச்சூழல் மாசு காரணமாக ஓட்டை விழுந்து வருகிறது. தொழில்மயமாக்கம் வேகமாக விரிவடைந்து வருவதால், காற்று மாசும் அதிகரித்து வருகிறது. இதன விளைவாக ஓசோன் படல ஓட்டையும் நாளுக்கு நாள் பெருத்து வருகிறது.

சூரியனிலிருந்து வரும் புற ஊதாக் கதிர்களை இந்த ஓசோன் படலம் வடிகட்டி அனுப்பி வைக்கிறது. ஒருவேளை புற ஊதாக் கதிர்கள் நேரடியாகத் தாக்குமானால் மனித இனத்துக்குப் பெரும் அழிவு உண்டாகும். ஆனால் ஓசோன் படலத்தில் உண்டாகும் ஓட்டை வழியாக ஆபத்தான புற ஊதாக் கதிர்கள் ஊடுருவி வருவதால், மனிதாகளுக்கு தோல் ... நோய் உண்டாகும் வாய்ப்பு அதிகரித்து வருகிறது. சூரியத் தாக்க... திகமாக இருக்கும் ஆபிரிக்க, அமெரிக்க நாடுகளில் பாதிக்... ட்டவர்களின் எண்ணிக்கை கூடிக் கொண்டே போகிறது. இந்நிலையில் தோல் புற்றுநோயுடன் நின்று விடாமல், புற ஊதாக் கதிகள் மனிதர்களுக்கு கற்றாக் எனப்படும் கண் நோயையும் உண்டு பண் ணுவது தெரிய வந்துள்ளது. இதனால் சூரியக்கதிர்களிடம் இனிமேல் கூடுதல் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டியுள்ளது. கடுமையான வெயில் காலங்களில் வெளியில் தலைகாட்டுவதை தவிர்க்க வேண்டும் என்று விஞ்ஞானிகள் யோசனை கூறியுள்ளனர்.

# பூவரசங்குளம் கிராமமக்கள் போக்குவரவில் எதிர்கொள்ளும் நெருக்கடி

மழை காலங்களில் ஏனைய பகுதி னான தொடர்பை முற்றாக இழந்த நிலை பூவரசங்குளம் பிரதேச மக்கள் வாழ்ந்து வரு கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பாண்டியன் குளப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியா கிய பூவரசங்குளம் துணுக்காயிலிருந்து ஏறத் தாழ ஆறு கிலோ மீற்றர்களுக்கு அப்பால் அமைந்துள்ளது.

பூவரசங்குளம் என இப்பகுதியை பொது வாக குறிப்பிட்டபோதும் அங்கு விநாயகபுரம், பொன்னகர், பூவரசங்குளம் என மூன்று கிராம சேவகர் பிரிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இக்கிராமங்கள் 1954ஆம் ஆண்டு காலப்பகுதி யில் உருவாக்கம் பெற்றபோதும் இன்றுவரை பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றன. இதற்குக் காரணம் அப்பகுதிப்போக்குவரத்துப் பாதை சீரின்மையே என அக்கிராமங்களின் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பாக பாண்டியன்குள கோட்ட தேசிய எழுச்சிப்பேரவை உறுப்பினர் கூறுகை யில்; இந்த மூன்று கிராமங்களும் மழை காலங் களில் வேறு எந்தப்பகுதியுடனும் தொடர்பற்றுப் போகின்றது. அவசர நிலையில் வைத்திய சாலைக்குச் செல்வதற்குக்கூட முடியாத நிலை ஏற்படுகின்றது. இங்கிருந்து நட்டாங்கண்டல் செல்வதானால் ஏழு கிலோ மீற்றர் தூரம் கடந்து செல்ல வேண்டும். அப்பகுதி அடர்ந்த காட்டுப் பகுதியாகக் காணப்படுவதோடு வீதிகள் முற்றாக சேதமடைந்தும், சேறுகள் நிறைந்தும் காணப்படு கிறது. இதனால் நோயாளர்களைக்கூட கொண்டு செல்ல முடியாது.

இங்கிருந்து மல்லாவி வைத்திய சாலைக்கு கொண்டு செல்லமுயன்ற கர்ப்பிணித்தாயொரு வருக்கு விரைவாக கொண்டு செல்ல முடியாத தாலும் வீதியில் ஏற்பட்டுள்ளபாரிய உடைவு களால் ஏற்பட்ட அழுத்தம் காரணமாகவும் இடை யிலேயே குழந்தையைப் பிரசவித்த சம்பவமும் ஏற்பட்டது. மழைக்காலத்தில் துணுக்காய் செல்வதானால் இடையில் ஒரு நீர்ப்போக்கி அமைந்துள்ள பகுதியில் நான்கு அடிவரைநீர் குறுக் கறுத்துப்பாயும் ஒரு நோயாளியைத் திவண்டியில் கூட ஏற்றிக்கொண்டு செல்ல முடியாதளவு இவ்வீதிகள் சேதமடைந்துள்ளன. அத்தோடு இங்கிருந்து ஒன்பதாம் தரத்திற்கு மேற்பட்ட வகுப்புகளில் கற்கும் மாணவர்கள் பாண்டியன் குளம் பாடசாலைக்கு செல கின்றனர். இவர்கள் மாரிகாலங்களில் பாட சாலை செல்லமுடி யாதுள்ளனர். நாங்கள் எமது இந்நிலைப்பாடு களை மிக நீண்டகாலத்திற்கு முன்பிருந்தே சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரியப்படுத்தி வருகின்றோம் ஆனால் இதுவரை எந்தவொரு நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லை.

அத்தோடு போக்குவரத்து வசதிகள் எதுவும் இல்லை. கடந்த மாதம் இரண்டு நாட்கள் பேருந்துப்பணி இடம் பெற்றது. ஆனால் வீதி சீரின்மையால் நிறுத்தி விட்டார்கள் என்றார்.



இது பற்றி பூவரசங் குள கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் நடராசா கூறுகையில்;

எமக்கு போக்கு வரத்து வசதிதான் இன் றைய சூழ்நிலையில் மிகவும் அவசியமான தாகவுள்ளது. ஏனெனில் காலங்காலமாக நாங்கள் பயணங்களின் போது சிரமங்களையே எதிர் நோக்கி வருகின்றோம். இங்கு பேருந்துப்பணி களை நடாத்தக்கூட முடியாத நிலையில் சம்பந்தப்பட்டவர்கள் அச்சேவையை இடையில் நிறுத்திவிட்டனர்.

எனவே எமக்கு இவ்வீதிகளை புனரமைத்து சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டும் என்றார்.

இங்கு அமைந்துள்ள மூன்று கிராமங் களிலும் 300 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இவர்களின் வாழ்க்கைத் தரமோ, பொருளாதாரமோ மேம்படவேண்டு மெனில் இப்பகுதிகளுக்கான போக்கு வரத்து வசதிகளை சீரமைத்துத்தருமாறும் ஏனைய அடிப்படைத் தேவைகளோடு மிகவும் முக்கிய மானதொரு தேவையாக போக்குவரத்து வீதி கள் புனரமைத்துத்தர சம்பந்தப்பட்டவர்களை முன்வருமாறு அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

(இ.சசி)

## கிளி.மாவட்ட மருத்துவமனையில் இடநெருக்கடி, மருத்துவர் பற்றாக்குறை

கிளிநொச்சி மாவட்ட மருத்துவ மனையில் நோயாளர்களின் தொகை சடுதியாக அதிகரித்துள்ளது. தற்போது பருவமழை பொழிந்து கொண்டு இருப்பதால் நோயாளர் களின் தொகை அதிகமாகக் காணப் படுகிறது.

நாள்தோறும் 600 வரையான நோயாளர்கள் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைப்பெற்று செல்கின்றனர்.

உள்நோயாளர் பிரிவில் பெரும ளவு நோயாளர்கள் சிகிச்சைபெற தங்கியிருப்பதால் இடநெருக்கடி காணப்படுகிறது. 100வரையான கட்டில்களைக் கொண்ட கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் 250 இற்கும் மேலான நோயாளர்கள் தங்கி சிகிச்சை பெறுவதனால் பல நோயாளர்கள் நிலத்தில் பாய்களை விரித்து தங்கியே சிகிச்சை பெறு வதைக் காணமுடிகிறது. கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் 40வரை யான மருத்துவர்கள் பணியாற்ற வேண்டிய நிலையில் தற்போது 12 வரையான மருத்துவர்களே பணியில் உள்ளனர்.

இதன் காரணமாக பல்வேறு நெருக்கடிகளை மருத்துவமனை நிர்வாகமும் நோயாளர்களும் எதிர்கொள்ளுகின்றனர்.

## சான்றிதழ் வழங்கல் நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

கிளி/கனகபுரம் கனிஷ்ட மகா வித்தியாலய... கிளி/கணனியியல் கல்லூரியில் கணனி கற்கைநெறியினைப் பூர்த்தி செய்து வெளியேறிய மாணவர்களுக் கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை காலை 9.00மணிக்கு இடம்பெறவுள்ளது. அன்றையதினம் அனைத்து மாண வர்களையும் தமிழர் புனர்வாழ்வுக் கழக நடவடிப்பகத்திற்கு (கந்த சுவாமி கோவில் அருகாமை) வருகை தருமாறு கணனியியல் கல்லூரி இயக்குனர்வேண்டுகை விடுத்துள் ளார்.

(சோ)


## வீதிகளைப் புனரமைப்புச் செய்ய கோரிக்கை

முல்லை மாவட்ட துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பட் டுப்பூச்சி சந்தியிலிருந்து நமணங் குளம் செல்லும் உட்பாதைகள் மக்கள் பயணிக்கமுடியாத பாவ னைக்குதவாமல் இருந்து வருகின் றன. மேற்படி கிராமத்தில் 30இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வரும் இந்நிலையில் இவ் வீதியானது அண் மையில் பெய்த தொடர் கன மழையி னால் சிதைந்தும் சீரழிந்தும் காணப்படு கின்றன. இது போன்று துணுக்காய் பிரதேசத்தின் விநாயகர் பண்டிரோட் வீதியும் சிதைந்து சீரழிந்துள்ளமை யால் 35இற்கு மேற்பட்ட குடும்பங்கள் இவ்வீதியூடான போக்குவரத்துக் களை செய்யமுடியாமல் அவலப்படு கின்றன. கடந்த வருடம் உலக உணவு திட்டத்தின் கீழ் விநாயகர் பண்டிரோட் வீதியின் உட்பகுதியின் வீதி திருத்தப்பட்டபோதும் பெரும் மழை வெள்ளத்தினால் அழிவுக்குள்ளானது. இதனால் இவ்வீதி சீரற்ற நிலையில் இருந்து வருகின்றது.

(24)

## உலங்கு வானூர்தி மீது துப்பாக்கிச்சூடு கண்காணிப்புக்குழு விசாரணை

அம்பாறை-அறுகம்பையில் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கான சிறிலங்கா வான்படை உலங்குவானூர்தி தொடர்பான விசாரணைகளை மேற்கொள் ளுமாறு விமானப்படைத்தளபதி போர்நிறுத்தக்கண்காணிப்புக்குழுவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.இதேவேளை இந்தச் சம்பவம் குறித்து இராணுவத்தரப்பில் இருந்து கிடைத்த முறைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு விசாரணைகளை மேற் கொண்டுள்ளதாக போர்நிறுத்தக் கண்காணிப் புக்குழு கூறியுள்ளது.



கடந்த 05.12.2005 அன்று முல்லைத்தீவிற்கு வருகை தந்த பரிசுத்த போப்பாண்டவரின் விசேடதூதுவர் மக்களினால் அழைத்து வரப்படுகின்றார்.

(20)

## புலிகளின் காவலிலுள்ளபொலிசார் உயர்அதிகாரிகளுடன் பேச்சு

தமிழீழவிடுதலைப்புலிகளினால் கைது செய்யப்பட்டுள்ள மூன்று சிறி லங்காப் பொலிசாரும் கிளிநொச்சியிலிருந்து கொழும்பிலிருக்கும் தமது உயரதிகாரிகளுடன் உரையாடியுள்ளனர்.

தடுத்து வைக்கப்பட்டிருக்கும் போப்டிகம, ஹேமந்த மற்றும் சரத் ஆகி யோர் நீண்ட நேரமாக தன்னுடன் தொலைபேசியில் உரையாடியதாக பொலிஸ் சிறுவர் பாதுகாப்புப்பிரிவு இயக்குனரான சிசில்பெரேரா தெரிவித்தார். இந்த மூன்று பேரும் தங்களை விரைவில் விடுவிக்குமாறு கேட்டதாகவும் தங்களின் குடும்பத்தவர்களின் சுக துக்கங்களைப் பார்க்குமாறு கோரியதாகவும் அவர் கூறினார்.

## போசாக்கு உணவு தயாரித்தலுக்கான செயல்முறைப் பயிற்சி

(அலுவலக செய்தியாளர்)

போசாக்கு உணவு தயாரித்தலுக்கான செயல்முறைப்பயிற்சி கடந்த 12ஆம் திகதியன்று கிளிநொச்சி விவசாய திணைக்கள பாடவிதான உத்தி யோகத்தர் திருமதி சத்தியவதி நடராசாவினால் அக்கராயன் மணியங் குளத்தில். நிகழ்த்தப்பட்டது மணியங்குளம் பொதுமண்டபத்தில் நிகழ்த்தப் பெற்ற இப்பயிற்சி வகுப்பில் 70 மாதர்கள் கலந்து பயன்பெற்றனர்.உணவு ஸ்தாபனத்தின் உதவியுடன் மணியங்குளம் மாதர்சங்கத்தின் ஏற்பாட்டில் மணியங்குளம் மாதர்சங்க பொருளாளர் மா.இராஜேஸ்வரி தலைமையில் மேற்படி பயிற்சி வகுப்பு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(சோ)

## சர்வதேச மனித உரிமைகள் தின நிகழ்வுகள்

(மல்லாவி)

முல்லை.மாவட்ட துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் சர்வதேச மனித உரிமைகள் தொடர்பான கலைநிகழ்வும் கருத்தரங்குகளும் அனிஞ்சி யன்குளம் தமிழ்க்கலவன் வித்தியாலய மண்டபத்தில் கடந்த புதன்கிழமை பிற்பகல் .3.00 மணிக்கு நடைபெற்றன. இந்நிகழ்வானது டெனிஸ் அகதிகள் பேரவையின் அனுசரணையுடன் பாண்டியன் குளம் துணுக்காய் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் பங்காளி நிறுவனமான சமூகமேம்பாட்டு நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் நடைபெற்றது.

அனிஞ்சியன்குளம் தமிழ்க்கலவன் வித்தியாலய ஆசிரியர் சு.சுபநேசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முதன்மையாக மங்கல விளக்கினை கிளிநொச்சி மாவட்ட டெனிஸ் அகதிகள் பேரவை,மனித உரிமைகள் தொடர்பான களஉத்தியோகத்தர் அறிவழகன்,பாண்டியன் குளம் துணுக்காய் பிரதேச தமிழர் புனர்வாழ்வுக்கழக பணிப்பாளர் செ.முல்லைவீரன், சமூக மேம்பாட்டு நிறுவன தலைவர் பிரிந்தாபன், டெனிஸ் அகதிகள் பேரவை முல்லைபிரதிநிதி பிறேமிளா ஆகியோர் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியை மாவீரன் கபிலனின் தாயார் பரமேஸ்வரி ஏற்றிவைத்தார். தொடர்ந்து அரங்க நிகழ்வில் கருத்துரைகள், கலைநிகழ்வுகள் இடம்பெற்றன.

(24)

# வடக்கு கிழக்கு பதற்ற நிலைக்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும்

- ஐ.தே.கட்சி துணை பொதுச் செயலாளர்

**வடக்கு கிழக்கில் தோன்றியுள்ள பதற்றமான சூழ்நிலைகளுக்கு முழுப்பொறுப்பையும் அரசாங்கமே ஏற்கவேண்டும் என ஐ.தே.க. துணைப் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.**

இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகள் தமது உண்மையான நிலைப்பாட்டை விரைவில் மக்களுக்குத் தெரியப் படுத்த வேண்டும்

ஜாதிக ஹெல உறுமயவும், ஜே.வி.பியும் சனாதிபதித்தேர்தலுக்கு முன்னர் மகிந்த ராஜபக்ஷவுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி செயற்படப் போகின்றனவா? இல்லையா? என்பதனைப் பகிரங்கப் படுத்த வேண்டும் எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் முற்பகல் இடம்பெற்ற ஐ.தே.க.வின் செய்தியாளர் மாநாட்டில், கருத்துத் தெரிவிக்கையிலேயே அத்தநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

புலிக்கும் யானைக்கும் இடையில் ஒப்பந்தம் இருப்பதாகக் கூறி கடந்த சனாதிபதித் தேர்தலின் போது பரப்பப்பட்ட செய்திகளில் எந்தவித உண்மையும் இல்லை என்று கடந்த நவம்பர் 17ஆம் நாள் தெரிந்து விட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஒப்பந்தம் செய்துகொண்டது யார்? கருணாவுடன் இணைந்து நாட்டில் குழப்பங்களை தோற்றுவிப்பது யார் என இப்போது நாட்டு மக்களுக்குத் தெளிவாகத் தெரிந்திருக்கின்றது.

நோர்வேயை வெள்ளைப் புலிகள் என்று வர்ணித்து நோர்வே நாட்டுத் தூதரகம் முன்பாக ஆர்ப்பாட்டம் செய்து அநாகரிகமான முறையில் அந்த நாட்டின் தேசியக்கொடியினை தீமூட்டி எதிர்ப்புத் தெரிவித்த ஹெல உறுமய நோர்வேயின் அனுசரணைக்கு தாம் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை எனக்கூறுகின்றது. அவ்வாறாயின் ஜே.வி.பி யின் நிலைப்பாடு என்ன? எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

# காட்டிக்கொடுப்பவர்களுக்கு தகுந்த பாடம் புகட்டுவேன்

-ஆறுமுகம் தொண்டமான்

சிறுபான்மை சமூகக்கட்டமைப்பை உடைக்க ஆளும் தரப்பு முனையும் என்றால் அனைத்து சிறுபான்மைக் கட்சிகளுடனும் இணைந்து செயற்பட தாம் தயாராக இருப்பதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கட்சி என்ற சமூகத்தினைப் பிரிக்கும் எண்ணப்பாட்டுடன் சுயநல சிந்தனையுடன் செயற்படுகின்றவர்களுக்கு தகுந்த பதிலடி கொடுப்பேன் எனவும் தெரிவித்துள்ளார்.

பி.பி.சி. தமிழழோசைக்கு அவர் வழங்கிய நேர்காணலிலேயே மேற்கண்ட கருத்துகளை முன்வைத்துள்ளார். அவர் இது குறித்து மேலும் தெரிவிக்கையில்;

கடந்த சனாதிபதித்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கவேண்டும் என்று இ.தொ.கா. எடுத்த முடிவு, மக்கள் சார்பாக சிந்தித்து எடுக்கப்பட்டது. அதே போன்று மலையக மக்களும் தங்களது சமூகக் கட்டமைப்பினை நிலைநிறுத்தியே வாக்களித்துள்ளனர்.

இதனால் தனிப்பட்ட நபர்களின் சலுகைக்களுக்காக சமூகத்தை காட்டிக்கொடுக்கும் கைங்கரியத்திற்கும் மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள்.

இ.தொ.காவைப் பிரிக்கும் நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டுவருகின்றது. சுகாதார துணையமைச்சுப் பதவியை வடிவேல் சுரேஸுக்கு வழங்கியிருப்பதன் மூலமே இது பகிரங்கமாக்கப்பட்டுள்ளது. எமது கட்சியினைப் பிரிக்கும் முயற்சிகள் ஆளும் தரப்பினரின் உதவிகளுடனேயே மேற்கொள்ளப்படுகின்றன.

இந்தக் காட்டிக்கொடுப்புகளுக்கு எதிராக இ.தொ.கா அவர்களுக்கு தகுந்த பாடம் புகட்டும். அடுத்த கட்டப் பயணத்திற்கும் நாம் தயார் இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# வெலிகந்தையில் விபத்து பத்துப் படையினர் காயம்

பொலநறுவை மாவட்டம், வெலிகந்தை, நவசேனபுர பகுதியில் சிறிலங்காப் படையினரின் கனரக ஊர்தியொன்று விபத்திற்குள்ளானதில் பத்துப் படையினர் படுகாயமடைந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. சிறிலங்கா இராணுவத்தின் கெமுனு படைப்பிரிவைச் சேர்ந்த படையினரே காயமடைந்துள்ளனர். இவர்கள் தற்போது பொலநறுவை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# இராணுவம் மீது ௬௮ தாக்குதல்கள்

சிறிலங்கா சனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ பொறுப்பேற்ற பின்பு இராணுவம் மீது 68 தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக படைத்தரப்பு அதிகாரிகள் மகிந்தவுக்கு கையளித்துள்ள புதிய விசாரணை அறிக்கையில் தெரிவித்துள்ளனர் என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

யுத்தநிறுத்த உடன்படிக்கை அமுலில் இருந்த 46மாதங்களினுள் 614 கொலைகள் நடைபெற்றுள்ளன. இதில் 88 இராணுவத்தினர் அடங்குவர். 287பொதுமக்களும், கருணா குழுவைச்சேர்ந்த 65 பேரும் கொல்லப்பட்டுள்ளனர்.

# முஸ்லிம்களின் பாதுகாப்பிற்காக இராணுவத்தில் தனிப்பிரிவு

- மு.ஐ.வி.மு. வலியுறுத்தல்

முஸ்லிம்களின் பாதுகாப்பிற்காக சிறிலங்கா இராணுவத்தில் தனியான படைப் பிரிவு ஏற்படுத்தப்படவேண்டும் என்று முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை செய்தியாளர்களிடம் முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைவர் முஜிபுர் ரஹ்மான் கூறியதாவது;

அரசாங்கத்தினால் இன்று கிழக்கிற்கு போதிய பாதுகாப்பினை வழங்க முடியாதுள்ளது. முஸ்லிம்களின் பாதுகாப்பிற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய தேவை எழுந்துள்ளது.

இராணுவத்திற்கு ஆட்களைச் சேர்க்கும்போது அதிகளவு முஸ்லிம்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். சிங்க மற்றும் கஜபா படைப் பிரிவுகள் போன்று முஸ்லிம்களுக்கு என பிறிதொரு பிரிவு ஏற்படுத்தப்படவேண்டும்.

முஸ்லிம் கிராமங்களுக்குப் பாதுகாப்பளிப்பதற்கு இருக்கும் ஒரே வழியானது இராணுவத்தில் முஸ்லிம்களைச் சேர்ப்பதுதான்.இல்லையேல் முஸ்லிம் மக்கள் தங்களுக்குத் தேவையான தீர்மானங்களை எடுப்பார்கள் என்றார்.

# பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக டலஸ் அழகப் பெரும?

சிறிலங்காவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக டலஸ் அழகப்பெரும நியமிக்கப்படக்கூடும் எனத் தெரிகிறது. கதிர்காமரின் பாராளுமன்ற உறுப்பினர் வெற்றிடத்திற்கு நியமிக்கப்படவுள்ள டலஸ்அழகப்பெரும எதிர்வரும் 19ஆம் திகதி பதவியேற்கவுள்ளார்.

இவரை நியமிக்கவுள்ளமை பற்றி பாராளுமன்ற செயலாளர் பிரியாணி விஜேசேகரவிற்கும் தேர்தல் ஆணையாளருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

டலஸ் அழகப்பெரும உள்நாட்டலுவல்கள் அமைச்சராகவும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராகவும் நியமிக்கப்படவுள்ளதாக மகிந்த ராஜபக்ஷ செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# வங்காள விரிகுடாவில் தாழமுக்கம்

வங்காள விரிகுடாவின் தாழமுக்கம் ஏற்பட்டுள்ளதாக காலநிலை அவதான அமையம் தெரிவித்துள்ளது.

அம்பாந்தோட்டையில் இருந்து 600 கிலோமீற்றர் தொலைவின் கிழக்குத் திசையில் இந்தத் தாழமுக்கம் ஏற்பட்டுள்ளது.

இது வடக்கில் ஐந்து பாகை மற்றும் கிழக்கில் 89 பாகைக்கும் இடையில் நிலை கொண்டிருப்பதாக காலநிலை அவதானமையம் அறிவித்துள்ளது.

இதன் காரணமாக கிழக்கு மற்றும் தென்பகுதி கடற்பகுதிகளில் கொந்தளிப்பு நிலை காணப்படுகிறது. அத்துடன் இடையிடையே மழை வீழ்ச்சியும் காணப்படும்

எனவே கடற்றொழிலாளர்கள் அவதானமாக இருக்குமாறு கேட்கப்பட்டுள்ளார்கள்.

# பாராளுமன்றக் கூட்டத்தை தொடர்ந்து நடத்த முடிவு

எதிர்வரும் பாராளுமன்றக் கூட்டத் தொடர்களை ஒத்திவைக்காமல் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

சனாதிபதியின் தலைமையில் நேற்றுமுன்தினம் கூடிய அமைச்சரவை இதற்கான முடிவை எடுத்தது.

இன்றும் நாளையும் பாராளுமன்ற கூட்டத்தொடரை ஒத்திவைக்க முன்னர் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. அமைச்சரவைத் தீர்மானத்தின்படி இந்தத் தீர்மானம் செயலிழந்துள்ளது. இதேவேளை எதிர்வரும் 22 ஆம் திகதி வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாவது வாசிப்பிற்கான வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

எனவே அன்றையதினம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பாராளுமன்றத்தில் பிரசன்னமாயிருக்கவேண்டும் என சனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

# ஜே.வி.பி. குற்றச்சாட்டுக்கு மகிந்த ராஜபக்ஷ மறுப்பு

சிறிலங்காவின் அமைச்சர் ஒருவர் 14மில்லியன் ரூபா மதிப்பில் சொகுசு வாகனம் வாங்கியுள்ளதாக ஜே.வி.பி. தெரிவித்திருந்த குற்றச்சாட்டை சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மறுத்துள்ளார்.

இது தொடர்பில் மகிந்த ராஜபக்ஷ வெளியிட்ட அறிக்கையில் அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுக்கு வாகனங்கள் வாங்கும் போது கொள்கை முடிவுகளைக் கடைப்பிடிக்குமாறு திறைசேரிக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.


## கேள்வி அறிவித்தல்

**முல்லை.மாவட்டத்திலுள்ள இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு கீழ்காட்டப்படும் மாதங்களில் நிவாரண விநியோகம் மேற்கொள்வதற்கு தேவையான கோதுமை மாவினை (பிறிமா கிறீன் பிரான்ட்) வழங்கக் கூடிய இம்மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட ப.நோ.கூ. சங்கங்களிலிருந்து மட்டும் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.**

| விநியோகிக்கப்பட வேண்டிய காலம் | | விநியோகிக்கப்பட வேண்டிய அளவு |
|---|---|---|
| சனவரி | 2006 | 200 மெற்றிக்தொன் |
| பெப்ரவரி | 2006 | 200 மெற்றிக்தொன் |
| மார்ச் | 2006 | 200 மெற்றிக்தொன் |

**இதற்கான கேள்விப்படிவங்களையும் மேலதிக விபரங்களையும் இச்செயலகத்தில் 2006.01.10 ஆம் திகதிவரை பெற்றுக்கொள்ளலாம்.**

**திட்டப்பணிப்பாளர் (டீ.ஆர்.ஆர்.எஸ்.)**
**அரசாங்க அதிபருக்காக,**
**முல்லைத்தீவு மாவட்டம்**

(சி.13570)


# மோசமான நிலையிலுள்ள பாலம்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி இராமநாதபுரத்தின் மாவடி அம்மன் ஆலயத்திற்கு அருகாமையில் உள்ளபாலம் அண்மையில் பெய்தமழை காரணமாக அரிப்புக்குள்ளாகி காணப்படுகின்றது. அரிப்புக்குள்ளாகியுள்ள இப்பாலம் மிகவும் மோசமான நிலையில் காணப்படுவதால் உந்துருளிகூட பயணிக்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மகாவித்தியாலயம் மற்றும் கரைச்சி பிரதேச உபபணிமனை என முக்கியமான நிறுவனங்கள் இயங்கி வரும் வீதியில் இப்பாலம் சேதம் அடைந்து காணப்படுவதால் பயணிகள் தமது அன்றாட தேவைகளுக்காக வீதியைச் சுற்றி வட்டக்கச்சி சந்தையடி வழியாக பயணித்து வருகின்றார்கள். ஆனால் கடும் மழை பெய்யுமானால் சந்தையடி நாவலடிக் கோஸ்வே அதிகளவு நீர் பாயும்போது இவ் வீதிபோக்குவரவுக்கு முற்றாகத் தடைப்படும் நிலையிலுள்ளது. (12)

# ஆய்வரங்கு நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

மாதந்த "தேடல்" அறிவோர் ஒன்றுகூடல் ஆய்வரங்கு நாளை பிற்பகல் 3.00 மணிக்கு கிளிநொச்சி நுண்கலைக்கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. "கலைஞனின் சமூகப்பொறுப்பு" எனும் தலைப்பில் இவ் ஆய்வரங்கு நிலாந்தனினால் நிகழ்த்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# ஈராக் எண்ணெய்க்கு உணவுத்திட்டம் தொடர்பாய் ஜகத்சிங்கை விசாரித்தது அமுலாக்கல் பிரிவு

(புதுடில்லி)

ஈராக்கின் எண்ணெய்க்கு உணவுத்திட்டத்தில் இடம்பெற்ற மோசடி தொடர்பாக இந்திய முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர்சிங்கின் மகனிடம் நேற்று முன்தினம் அமுலாக்கல் பிரிவால் விசாரணை நடத்தப்பட்டிருக்கிறது.

நட்வர்சிங்கின் மகன் ஜகத்சிங்கிடம் அமுலாக்கல் பிரிவு அதிகாரிகள் விசாரணை நடத்தும் போது இவர் ஜோர்டான் வங்கியில் கோடிக் கணக்கில் பணம் வைப்பில் வைக்கப்பட்டிருப்பதற்கான சான்று ஆவணங்களைக் காட்டி விசாரணை மேற்கொண்டதாகத் தெரிகிறது.

ஈராக்கின் எண்ணெய்க்கு உணவுத்திட்டத்தின் கீழ் முன்னாள் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர்சிங்கின் மகன் ஜகத்சிங்குக்கு எண்ணெய்க் கூப்பன்கள் கொடுக்கப்பட்டது எனக்குத் தெரியும் என்று குரேஷியாவுக்கான முன்னாள் இந்தியத் தூதர் மத்ரானி கூறியதைத் தொடர்ந்து பிரச்சினை பூதாகரமாகியது. இதையடுத்து நட்வர்சிங் அமைச்சர் பதவியை இழந்தார்.

இந்த விவகாரம் குறித்து அமுலாக்கல்பிரிவு விசாரணையைத் தொடங்கியுள்ளது. இந்தத் துறையின் அதிகாரிகள் முதற் கட்டமாக ஜோர்டான் மற்றும் ஈராக் சென்று தேவையான ஆவணங்களைச் சேகரித்தனர். 2001 இல் ஜகத்சிங், காங்கிரஸ் குழுவில் இடம்பெற்று ஜோர்டான் வழியாக பாக்தாத் சென்றிருக்கிறார். அப்போது ஜோர்டான், ஈராக்கில் உள்ள மூன்று வங்கிகளில் ரூ.500 கோடிக்கு மேல் வைப்புச் செய்திருப்பதாக தகவல் வெளியானது. அமுலாக்கல் பிரிவு அதிகாரிகள் இந்த வங்கிகளுக்குச் சென்று இந்த வைப்புத் தொடர்பான ஆவணங்களைத் திரட்டி உள்ளதாகத் தெரிகிறது.

இதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் ஜகத்சிங்கை விசாரணைக்கு வருமாறு அமுலாக்கல் பிரிவு அழைப்பாணை அனுப்பியது. அதை ஏற்று ஜகத்சிங் அமுலாக்கல்பிரிவு அலுவலகத்துக்குச் சென்றார். அவரிடம் அதிகாரிகள் துருவித் துருவிக் கேள்விகள் கேட்டனர். வங்கி வைப்புத் தொடர்பாக கேள்விகள் கேட்டு துளைத்தெடுத்தனர். 2001 இல் தனது தந்தை நட்வர்சிங்குடன் ஈராக் சென்றதை ஜகத்சிங் ஒப்புக்கொண்டார்.


## UNIVERSITY OF JAFFNA, FACULTY OF ARTS

### MEDIA RESOURCES AND TRAINING CENTRE

University of Jaffna will entertain applications from graduates for the under mentioned post up to 30th December 2005

**POST OF INTRUCTOR IN JOURNALISM (ON CONTRACT)**

Preference will be given to those who have

a) Good experience with print or electronic media or both
b) Followed/completed training in Journalism
c) Relevant degree

Salary Rs.10, 250 /- (Fixed) p.m
Rs.14,350/- (Fixed) p.m payable with effect from 1/1/2006

Note: In Addition to the above salary, the allowance approved by the University Grants Commission will also be paid.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/Establishments, University of Jaffna Sri Lanka, for Rs.20/- per form, either in person or by sending a money order. Those who wish to obtain application forms by post are requested to send a Money order/ Postal order drawn in favour of the "Bursar, University of Jaffna" together with a self-addressed stamped envelop 23x30 cm in size

Applicants from the University system/Government Departments/Corporations and statutory Boards should Channel their applications through the Head of respective Institutions

Applications received after the closing date will be rejected without intimation. Only short listed applicants will be called for an interveiw.

REGISTRAR.
University Of Jaffna, Sri Lanka (சி.(13499)

## பதவி வெற்றிடம்

சேவாலங்கா
SEWALANKA

கிளிநொச்சி சேவாலங்கா நிறுவனத்தின் சுனாமி அலுவலகத்தில், நிர்வாக உதவியாளர் பதவிக்கு உடனடியாக நியமனம் செய்வதற்காக பின்வரும் தகைமைகளைக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமை:- 1) க.பொ.த. பத்திரம் (உயர்தரம்), அல்லது க.பொ.த (சா.த) பரீட்சையில் குறைந்தது ஐந்து திறமைச் சித்தி, முக்கியமாக ஆங்கிலத்தில் சித்திபெற்றிருக்க வேண்டும்.

2) கணனி M.S Office,page maker அல்லது அதற்குச் சமமான தராதர பத்திரங்கள்.

விண்ணப்பங்கள் நேரடியாகவோ, பக்ஸ் மூலமாகவோ, கடித மூலமாகவோ அனுப்ப வேண்டிய முகவரி:-
திட்டப்பணிப்பாளர்,
சேவாலங்கா மன்றம்,
சுனாமி காரியாலயம்,
இல:-72,திருநகர்,
கிளிநொச்சி.

Fax No:- 021 2283957

விண்ணப்பங்கள் சேரவேண்டிய இறுதித் திகதி:-22.12.2005.

குறிப்பு:- கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும். (சி.13571)

## முக்கிய அறிவித்தல்

முல்லை.மாவட்டத்திலுள்ள இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு ஐப்பசி, கார்த்திகை, மார்கழி ஆகிய மாதங்களுக்கு நிவாரண விநியோகம் நடைபெற்று வருகின்றது. இதுவரை நிவாரணம் பெறாதவர்கள் 26.12.2005இற்கு முன்பாக நிவாரணப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளுமாறும் விடுமுறை நாட்களிலும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கக்கிளைகள் அனைத்திலும் நிவாரணப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதனை அறியத் தருகின்றோம்.

திட்டப்பணிப்பாளர் (டி.ஆர்.ஆர்.எஸ்.)
அரசாங்க அதிபருக்காக,
முல்லைத்தீவு மாவட்டம்.
(சி.13569)

## UNIVERSITY OF JAFFNA

### FACULTY OF MEDICINE
### DEPARTMENT OF BIO CHEMISTRY
### SWEDISH INTERNATIONAL DEVELOPMENT AGENCY

## INVITATION for BIDS

### PROCUREMENT OF COLD ROOM WORKS

1. Faculty of Medicine of the University of Jaffna, Thirunelvely has received a grant from the Swedish International Development Agency (SIDA) in Swedish Kronor (SEK) currency towards the cost of the Providing Cold Room facilities and intends to apply the proceeds of this grant to eligible payments under the contract for which **this invitation for BIDDING is issued.**
2. **Dean, Faculty of Medicine** of the University of Jaffna will reccive sealed Bids for Providing Cold Room facilities to the **Bio-Chemistry Dept of the Faculty of Medicine** and receiving will be closed at **10.00 hrs** on **06.01.2006.**
3. Bids should be submitted on the forms available from **the office of the Dean, Faculty of Medicine of the University of Jaffna** up to **- 22.12. 2005** on a payment of non-refundable fee of Rupees 2000/=.
4. Bidding is open to all supply contractors of prefabricated cold room units.
a) who could undertake to supply with the capacity to execute connected civil works:
b) have satisfactorily completed at least two similar contracts within the past five years which should be supported by certificates from clients and / or consultants. Bidding documents may be inspected free of charge at **the Office of the Dean Faculty of Medicine , University of Jaffna during office hours.**
5. All bidders should have business registration and should have legal capacity to enter in to contract.
6. All bidders should have documents to prove that they have necessary professional, technical and organizational capacity, financial resources to perform this contract.
7. All bidders should have proven experience of supply and after sales requirements as specified in the bidding documents, including the satisfactory completion of similar contracts in the recent past.
8. Bids shall be valid up to **06.04.2006.**
9. All bids shall be accompanied by a Bid security for **Rs:150,000/=**
10. Deadline for submission of bids shall be **06.01.2006 before 10.00** hrs.
11. Sealed Bids shall be sent by registered post addressed to the Dean, **Faculty of Medicine, University of Jaffna, Kokuvil** or deposited in the tender box which shall be kept in the same address above on or before **10.00** hrs on **06.01.2006.**
12. Bids will be opened on **06.01.2006** immediately after closing tenders in the presence of the Dean, Faculty of Medicine at the office of the Dean. Faculty of Medicine, University of Jaffna., Kokuvil, Thirunelvely.
13. Bidders or their authorized representatives may be present at the opening of Bids.
14. For further details or clarifications, bidders may contact

**S.Ruthiralingam of Rudra Engineering & Architectural Consultancy Organization. No, 06, Nallur Cross Road, Jaffna.**

Telephone No - 021-222-5534: Fax No:021-222-5534: e -mail: ruhlins @ yahoo.com

Registrar. **University of Jaffna Jaffna.** (சி.13500)

# நிற்றினி, நெல் அபார பந்து வீச்சு
# 255 ஓட்டங்களுடன் சுருண்டது அவுஸ்





அவுஸ்திரேலிய-தென்னாபிரிக்க அணிகளுக் கிடையில் அவுஸ்திரேலியாவின் பேர்த்தில் நடைபெற்று வரும் முதலாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்காவின் கை ஓங்கியுள்ளது.

போட்டியின் ஆரம்ப நாளான நேற்று நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலியா முதலில் துடுப்பாடத்தீமானித்து. 255 ஓட்டங்களை மட்டும் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

தென்னாபிரிக்க பந்துவீச்சில் நிற்றினி அபாரமாகப் பந்து வீசி ஐந்து விக்கெட் டுக்களையும் அன்ருநெல் மூன்று விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் பொண்டிங் மாத்திரம் அரைச்சதத் தைக் கடந்தார். ஏனையோர் சொற்ப ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர்.



பொண்டிங் 71 ஓட்டங்களையும், லாங் கர் 37, ஹொக் 41, குசே 23, சைமன்ட் 13 கில்கிறிஸ்ட் ஆறு, வோன 24ஓட்டங்களையும் பெற்று ஆட்ட மிழந்தனர். ஹெய்டன் ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்தார். பதிலுக்கு முதலாவது இனிங்சை ஆடும் தென் னாபிரிக்கா நேற்றைய ஆட்ட நேர நிறைவில் விக்கெட் இழப்பின்றி 38ஓட்டங்களைப் பெற்றிருந்தது. துடுப்பாட்டத்தில் சிமித் 18 [illegible] 18 ஓட்டங்களையும், விஸ்லியர்ஸ் 14ஓட்டங்ளையும் பெற்று [illegible] உள்ளனர். போட்டியின் இரண்டாம் நாள் இன்று.

# வி.கழக அங்கத்தவர்களுக்கான அறிமுக அட்டை வழங்கல்

தமிழீழ விளையாட்டுத்துறையினரால் அனைத்து மாவட்ட விளையாட்டுக் கழக அங்கத்தவர்களுக்குமான அறிமுக அட்டை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே முதற்கட்டமாக கிளி.மாவட்டத்தைச்சேர்ந்த பின்வரும் விளையாட்டுக் கழகங்களுக்கான அறிமுக அட்டை கிடைக்கப்பெற்றுள்ளன. மாவட்ட விளையாட்டுத்துறைப்பொறுப்பாளருடன் தொடர்பு கொண்டு தங்கள் கழக வீரர்களின் அறிமுக அட்டையினை தமிழீழ விளையாட்டுத்துறை நடுவப்பணியகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

2006 ஆம் ஆண்டு முதலாம் திகதியில் இருந்து அறிமுக அட்டை பெற்றுக்கொள்ளாத விளையாட்டுக்கழகம் போட்டி களில் பங்குபற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.. எனவே தங்கள் மாவட்ட பொறுப்பாளர்களுடன் தொடர்புகொண்டு ஒழுங்கு படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அறிமுக அட்டை பெறும் கழகங்கள் வருமாறு,

கிருஸ்ணபாரதி.வி.கழகம், அன்பு ஐக்கிய வி.கழகம், ஜெகமீட்பர் வி.கழகம், ஸ்கந்தா வி.கழகம், ஸ்ரார் வி.கழகம், செண்மேரிஸ் வி.கழகம்,செந்தாரகை வி.கழகம்,இளம்தளிர் வி.கழகம், ஜொனி வி.கழகம்,கனகபுரம் வி.கழகம்,லக்கிஸ்ரார் வி.கழகம். (கு)

# கண்டாவளைப் பிரதேச செயலக கழகங்களுடனான கலந்துரையாடல்

கண்டாவளைப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கழகங்களுக்கிடையிலான கலந்து ரையாடல் எதிர்வரும் 23.12.2005 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு பிரதேச செயலர் சி. சத்தியசீலன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடை பெறவுள்ளது. எனவே கழகங்களின் தலை வர், செயலாளர் தவறாது சமுகம்கொடுக்கு மாறு கண்டாவளைப் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் க.புவேனந்திரராஜா அறி வித்துள்ளார்.



இந்திய கிரிக்கெட் அணியிலிருந்து சவுரவ் கங்குலியை நீக்கியதால் கொல்கத்தா நகரமே கோபத்தில் கொந்தளித்தது. ஒரு சிலர் தேர் வுக்குழுத்தலைவர் கிரண் மோரே, பயிற்சியா ளர் கிரேக்சப்பல் ஆகியோரது உருவப் பொம் மைகளை எரித்து தங்கள் எதிர்ப்பை வெளிப் படுத்தினர்.

# கங்குலியின் நீக்கம் தவறானது முன்னாள் வீரர்கள் விசனம்



இந்திய கிரிக்கெட் அணியிலிருந்து முன்னாள் தலைவர் கங்குலி நீக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து முன்னாள் இந்திய கிரிக்கெட் அணித் தலைவர்களும் வீரர்களும் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

மொகிந்தர் அமர்நாத் தெரிவிக்கையில்; கங்குலியைநீக்கியது விரும்பத்தகாதது என்று சீனியர் வீரருக்கு மதிப்பு கொடுக்கவில்லை ரசிகர்களுக்கு தேர்வுக் குழுவினர் [illegible] லியாக வேண்டும்.

சந்தீப்பட்டேல் [illegible] மிகவும் அனுபவம் வாய்ந்த [illegible] குழுவினர் அவரை நீக்கியது கடுமையான முடிவு இளம் வீரர்களுக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும் என கிரண்மோரே கூறியுள்ளார்.

கம்பீருடைய ஆட்டம் மிக மோசமாக உள்ளது. அவருக்கு தொடர்ந்து வாய்ப்பு வழங்கப்பட் டுள்ளது. கேட்டால் அவர் இளம் வீரர் என் கிறார்கள். அப்படியென்றால் முகமது கயூப், ரெய்னா போன்ற வீரர்கள் வாய்ப்புக்காக காத் திருக்கிறார்கள்.

கங்குலிக்கு மட்டும் ஏன் இந்த விதி அமுல் படுத்தப்பட்டது என்று தெரியவில்லை. லட்சு மண்சிவாக் தொடர்ந்து மோசமாக ஆடி வரு கின்றார்கள்அவர்கள் எல்லாம் தேர்வுக் குழுவி னர் கண்களுக்கு தெரியவில்லையா? எனத் தெரிவித்துள்ளார்.

வெங்சாக்கர் தெரிவிக்கையில்; கங்குலி இரண்டு இன்னிங்சிலும் அருமையாக ஆடினார். இருந்தும் அவர் நீக்கப்பட்டுள்ளார். இதற்கு பின்னணி ஏதோவுள்ளது.

சந்துருபோர்டே தெரிவிக்கையில்; கங்குலி [illegible] அறிந்ததும் மிகவும் அதிர்ச்சி [illegible] தேர்வுக் குழுவினரின் இந்த முடிவு [illegible] செயற்பட்டார். திறமை சரியில்லையென்று கூறியதால் அவர் உள்ளூர் போட்டிகளில் சிறப்பாக ஆடி மீண்டும் அணியில் இடம்பிடித்தார்.

ஆனால் இப்போது நன்றாக ஆடியும் அணியில் அவருக்கு இடமில்லை என்கிறார் கள்.

சகலதுறை வீரர் எனக்கூறித்தான் முதல் டெஸ்டில் சேர்த்தனர். ஆனால் டில்லி டெஸ்ட் டில் கங்குலியை ஒரு பந்து கூட வீச அனு மதிக்கவில்லை இதற்கு தேர்வுக் குழுவினர் பதில் அளிக்கவேண்டும்.

கங்குலிக்குப் பதிலாக வாசிம் ஜபாரை தேர்ந்தெடுத்துள்ளனர். அவர் மிடில் ஆர்டர் துடுப்பாட்டவீரர்தான். அவரால் தொடக்க ஆட்டக்காரராக எப்படிச் செயற்பட முடியும். இது எந்த விதத்தில் நியாயமாகும்.

மதன்லால் தெரிவிக்கையில்: கங்குலியை நீக்கியது. மிகவும் தவறானது அவருக்கு ஒரு முறைதான் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அவரை மூன்றாவது டெஸ்டிலும் விளை யாட அனுமதித்திருக்க வேண்டும். கங்குலி யிடம் திறமை உள்ளது. மீண்டும் அவர் திரும்புவார்.அருண்லால் தெரிவிக்கையில்; தேர்வுக்குழுவினர் இந்த இலங்கை டெஸ்ட் தொடர் முடியும் வரை பொறுத்திருக்கலாம். அவர் நீக்கப்பட்டதற்கு கிரிக்கெட் வாரியத் தில் ஏற்பட்டுள்ள மாற்றமே காரணம். என்றார்.

# தெற்காசிய கால்பந்து இறுதிப்போட்டி
# இந்தியா-பங்களாதேஷ் பலப்பரீட்சை

தெற்காசிய கால்பந்து சம்பியன் போட்டி பாகிஸ்தானில் உள்ள கராச்சியில் நடந்து வருகிறது. இதன் அரை இறுதி ஆட்டம் ஒன்றில் மூன்றுமுறை சம்பியன் பட்டத்தை வென்றுள்ள இந்திய அணி, மாலைதீவு அணியுடன் பலப் பரீட்சை நடத்தியது. தொடக்கம் முதலே இரு அணியினரும் சமபலத்துடன் ஆடினர். இதனால் இரு அணியினராலும் உடனடியாக கோல் எதை யும் போடமுடியவில்லை. ஆட்டத்தின் 38 ஆவது நிமிடத்தில் இந்தியா முதல் கோலை அடித்தது. இந்தியவீரர் மான்ஜு, சிவான்ஜு, இந்தக் கோலை அடித்தார். பின்னர் இரு அணியினரும் [illegible]வும் அடிக்கவில்லை. இதில் இந்திய [illegible]-0 என்ற கோல்க் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு தகுதி பெற் றது.

மற்றொரு அரையிறுதியில் பாகிஸ்தான்-பங்களாதேச அணிகள் மோதின.இந்த ஆட்டத் தில் 1-[illegible] என்ற கோல் கணக்கில் பங்களாதேச அணி, பாகிஸ்தானை வீழ்த்தி இறுதிப்போட்டிக் குள் நுழைந்தது. இறுதிப்போட்டியில் இந்தியா-பங்களாதேச அணிகள் இன்று மோதுகின்றன. ஏற்கனவே லீக் ஆட்டம் ஒன்றில் இந்தியாவும் பங்களாதேஷ் அணியும் மோதின. இந்த ஆட்டம் 1-1என்ற கணக்கில் சமநிலையில் முடிந்தது குறிப்பிடத்தக்கது.

# பாரிய தோல்வியிலிருந்து மீள இங்கிலாந்து கடுமையாக உழைக்கவேண்டும்



பொப்வூல்மர்

நேற்று முன்தினம் நடைபெற்ற பாகிஸ்தானு டனான மூன்றாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி யில் பெற்ற பாரிய தோல்வியில் இருந்துமீள இங்கிலாந்து அணி கடுமையாக உழைக்க வேண்டும் என பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் பயிற்றுனரும் இங்கிலாந்தைச் சேர்ந்தவருமான பொப்வூல்மர் கருத்துத் தெரி வித்துள்ளார்.

பாகிஸ்தான் அணியின் திறன்தொடரு மானால் அது தொடர்பில் இங்கிலாந்தின் கணிப்பு கடுமையானதாக இருக்கும் என்று தெரிவித்த அவர் இங்கிலாந்தையும் குறைத்து மதிப்பீடக்கூடாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அவர்மேலும் குறிப்பிடும்போது; பீற்றர்சனின் பங்களிப்பின்மை அவ்வணிக்கு பெரும்வீழ்ச்சி என்றதுடன் அவர் இருந்திருப்பின் 354 என்ற இலக்கை ஓரளவு எட்டிப்பிடிக்கும் சாத்தியம் இருந்திருக்கும் என்றார்.

இந்தப்போட்டித் தொடரில் கமறன் அக்மல் நீண்ட நாட்களின்பின் திறமையை வெளிக்காட்டியிருப்பதுடன் யசிர் அரபாத் பிளின்டொப்பை யோர்க்கர் முறை பந்தில் ஆட்ட மிழக்கச் செய்தமை தேர்வாளர் குழுவை தட்டி யெழுப்பியுள்ளதாக வூல்மர் தெரிவித்தார்.




# பந்துவீச்சில் கும்ளே முன்னேற்றம்



டெஸ்ட் கிரிக்கெட் போட்டி யின் பந்துவீச்சு வரிசைப்பட்டியலில் இந்திய அணி வீரர் கும்ளே பத்தாவது இடத்தில் இருந்து ஐந்தாவது இடத் திற்கு முன்னேறி யுள்ளார்.

டெஸ்ட் கிரிக் கெட் போட்டிகளின் அடிப்படையில் அணிகள் மற்றும் வீரர்களின் வரிசைப்பட்டியலை சர்வ தேச கிரிக்கெட்சபை வெளியிட்டுள்ளது. பந்து வீச்சில் இந்திய சுழற்பந்து வீச்சாளர் கும்ளே ஐந்தாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார். இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் பத்து விக்கெட்டுக்களை வீழ்த்தியதன் மூலம் பத்தாவது இடத்திலிருந்து கும்ளே தற்போது ஐந்தாவது இடத்திற்குத் தாவியுள்ளார். அவுஸ்திரேலியவீரர் மெக்ராத் 882புள்ளிக ளுடன் முதல் இடத்தில் தொடர்ந்த வண்ண முள்ளார்.அவுஸ்திரேலியவீரர் ஷேன்வோர்ன் (865புள்ளிகள்), இலங்கை வீரர் முரளிதரன் (862புள்ளிகள்), பாகிஸ்தான்வீரர் அக்தர் (798புள்ளிகள்)ஆகியோர் முறையே இரண்டு முதல்நான்கு இடங்களைப்பிடித்துள்ளனர்.

ஷோன்பொலக் (தென்னாபிரிக்கா) ஆறாவது இடத்திலும் நிதினி (தென்னாபிரிக்கா) ஏழாவது இடத்திலும் வாஸ் (இலங்கை) எட்டாவது இடத்திலும், பிளின்டொப் (இங்கிலாந்து) ஒன்ப தாவது இடத்திலும், இந்திய வீரர் இர்பான் பதான் பத்தாவது இடத்திலும் உள்ளனர்.

## சிந்தனைக்கு



பழையன கழிந்து புதியன சேர்ந்து செழுமைப்படும் கலை-கலா சாரம், பண்பாடு எமது இனத்திற்குப் பெருமை சேர்க்கும்; எமது மக்களின் மனவுலகில் ஒரு புரட்சிகரமான விழிப்புணர்வைத் தோற்றுவிக்கும்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை, கிளிநொச்சி.
17.12.2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# ஆக்கிரமிப்பிற்கான ஒத்துழைப்பு!

பலாலி விமானப் படைத்தளத்தை விஸ்தரிக்கும் சிறிலங்கா அரசின் நடவடிக்கைகளுக்கு இந்திய அரசு வழங்கும் உதவி என்பது தமிழர் தாயகத்தில் சிறிலங்கா அரசு மேற்கொள்ளும் ஆக்கிரமிப்பிற்கு வழங்கப்படும் ஒத்துழைப்பாகவே இருக்கும். ஆகையினால் இவ் ஒத்துழைப்பு குறித்து இந்திய அரசு மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை தமிழ் மக்கள் தரப்பில் பரவலாக முன்வைக்கப்பட்டு வருகின்றது.

சிறிலங்கா - இந்திய அரசிற்கிடையிலான உறவு மிகவும் நெருக்கமானதாகவுள்ளது என்பது தமிழ் மக்களுக்கு நன்கே தெரியும். இந்திய அரசு தமிழ் மக்களுக்கு எத்தகைய உதவியும் வழங்குவதற்குத் தயாராக இல்லை என்பதையும் தமிழ்மக்கள் புரிந்து கொண்டேயுள்ளனர்.

சிறிலங்கா அரசுடன் அரசியல், பொருளாதார இராணுவ ரீதியான ஒத்துழைப்பு மிக நெருக்கமாக உள்ளதென்பதும் அறியப்பட்ட விடயமே. தமிழ் மக்கள் சுனாமியினால் பெரும் துயருற்ற போதும் இந்திய அரசு நேரடியாக அவர்களுக்கு உதவ முன்வரவில்லை என்பதில் இருந்தே இது நன்கு உணரப்பட்டிருந்தது.

ஆனால் இவை குறித்துத் தமிழ் மக்கள் கவலை கொண்டுள்ள போதும் இந்தியாவின் நடவடிக்கைக்கு ஆட்சேபமோ வருத்தமோ தெரிவிக்கவில்லை. ஏனெனில் இந்திய அரசின் இத்தகைய நடவடிக்கைகள் தமிழ் மக்களைப் பெரிதாகப் பாதிக்கவில்லை.

அதாவது இந்திய அரசு ஆபத்து வேளையிலும் கூட உதவவில்லை என்பதுடன் மட்டும் போய்விட்டது. இதே போன்று இந்தியாவின் பொருளாதார நலனும் தமிழ் மக்களால் பார்க்கப் பட்டது. இந்தியா இல்லாது விட்டால் வேறு யாரோ பெற்றுக் கொள்ளப்போவது என்ற முடிவுடன் நோக்கப்பட்டது.

இராணுவ உதவியும், (பயிற்சி ஆலோசனை உட்பட்ட ஒத்துழைப்பு) இந்தியா இல்லாவிட்டால் சிறிலங்கா வேறு யாரிடமோ பெற்றுக்கொள்ளத்தான் போகிறது என்ற அபிப்பிராயம் இருந்தது.

ஆனால் இந்தியா பலாலி விமானப் படைத்தளத்தை விஸ்தரிப்பதற்கு உதவுதல் என்பது சிறிலங்கா இராணுவத்திற்குப் பயிற்சி ஆலோசனை என்பதற்கு அப்பால் நேரடியாக இராணுவ ரீதியான உதவி வழங்குவதாகவே கொள்ளத்தக்கது.

சிறிலங்காக் கடற்படையுடன் தகவல் பரிமாற்றம், சிறிலங்கா- இந்தியக் கடற்படை கூட்டுப் பயிற்சி என்பனவற்றில் இருந்து சிறிலங்காக் கடற்படை இந்தியக் கடற்படைக் கூட்டு ரோந்து என்பது வரையில் சிறிலங்கா- இந்தியா இடையில் இராணுவ ஒத்துழைப்பு வளர்ச்சி கண்டுள்ளது என்பது ஏற்கனவே அறியப்பட்ட விடயங்களே.

ஆயினும் பலாலி விஸ்தரிப்பிற்கு இந்திய அரசு வழங்கும் ஒத்துழைப்பானது சிறிலங்கா அரசின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைக்கு நேரடியாக வழங்கும் ஒத்துழைப்பாகவே கருதத்தக்கதாகும். அதாவது சிறிலங்கா ஆயுதப்படையினர் தமிழர் தாயகத்தில் மேற்கொள்ளும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைக்கு நேரடியாக இந்தியா அங்கீகாரமும் ஒத்துழைப்பும் வழங்குவதாகவே கொள்ளத் தக்கதாகும்.

ஏனெனில் பலாலி விமானப்படைத்தள விஸ்தரிப்பானது ஒரு புறத்தில் யாழ்.குடா நாட்டில் சி லங்கா இராணுவத்தின் இருப்பை உறுதிசெய்வதற்காக மே கான்ளப்படும் நடவடிக்கை என்பதற்கும் அப்பால் இவ் விஸ்தரிப்பு நடவடிக்கை அரச காணிகளிலோ அன்றி இதுவரையில் பயன்படுத்தப்படாது கிடந்த தரிசு நிலத்திலோ மேற்கொள்ளப்படவில்லை.

தமிழ் மக்களின் தனிப்பட்ட சொந்தக் காணிகளில் இவ் விமான நிலைய விஸ்தரிப்பு இடம்பெறவுள்ளது. இராணுவ ஆக்கிரமிப்புக் காரணமாக மக்கள் விரட்டப்பட்ட பூமியில் மேற்கொள்ளப்படும் விஸ்தரிப்பு நடவடிக்கையாகும். இவ் விஸ்தரிப்பினால்அப் பகுதியி இருந்து இடம்பெயர்ந்துள்ள 50,000 தமிழ் மக்கள் நிரந்தரமாக தமது குடியிருப்புக்களையும் விளை நிலங்களையும் இழப்பதோடு நிரந்தரமாக அகதிகளாக்கப்படும் நிலையை உருவாகக் கூடியதாகும்.

இவ் விமான நிலையம் விஸ்தரிக்கப்படும் நிலங்கள் தொடர்பாக சிறிலங்கா நீதிமன்றங்களோ முடிவுக்கு வரமுடியாது திண்டாடும் நிலையே காணப்படுகின்றது. காணிகளின் சொந்தக்காரர்களுக்கு நீதிமன்றும் தீர்ப்புக்கூற முடியாதும், தீர்வு காண முடியாமலும், தத்தளித்து வருகின்றது.

இத்தகையதொரு நிலையில் சிறிலங்கா அரசின் விஸ்தரிப்பிற்கு இந்தியா உதவுவதென்பது தமிழ் மக்களுக்கு பெரிதும் கவலையளிப்பதாகவுள்ளது. இந்திய அரசு தமிழ் மக்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுக்காது போனாலும், எதிரான நடவடிக்கைகளையாவது மேற்கொள்ளாது இருந்தால் போதும் என்பதே தமிழ் மக்களின் உணர்வாகவுள்ளது. இந்திய அரசு விமானப்படைத்தள விஸ்தரிப்பிற்கு உதவப்போவதாக வெளியாகியுள்ள தகவல்கள் இந்திய அரசிட இருந்து எதிர்பார்க்க எதுவுமில்லை என்ற உணர்வையே ழ் மக்களுக்கு ஏற்படுத்துவதாயுள்ளது.




# பத்திரிகை அலுவலகம் மீதான இராணுவ தேடுதல்

# கருத்து, தகவல் சுதந்திரத்தை நசுக்கும் செயல்

## - சுதந்திர ஊடக இயக்கம் கண்டனம்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் நமது ஈழநாடு அலுவலகத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனைக்கு சுதந்திர ஊடக இயக்கம் கவலை தெரிவித்துள்ளது. அந்த அமைப்பின் பேச்சாளர் சுனந்த தேசப்பிரிய வெளியிட்டுள்ள அறிக்கை;

யாழ்ப்பாணத்தில் தமிழ் நாளிதழான நமது ஈழநாடு அலுவலகத்தில் சிறிலங்கா இராணுவம் தேடுதல் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது கவலையளிக்கிறது. யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவருகிற நான்கு முக்கிய நாளிதழ்களில் நமது ஈழநாடும் ஒன்று.

இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதியில் தனிநாடு கோரி ஆயுதம் ஏந்திப் போராடுகிற தமிழ் தேசிய சக்திகளுக்கு ஆதரவாக தனது தலையங்கங்களை யாழின் நான்கு நாளிதழ்களுமே எழுதி வருகின்றன.

யாழ்ப்பாணத்தில் கடந்த சில வாரங்களாக அதிகரித்து வரும் வன்முறைகளின் வெளிப்பாடாகவே தற்போதைய சூழ்நிலையை நாம் அணுகுகிறோம். இந்த எதிர்பாராத சூழ்நிலையினால் பல இராணுவத்தினர், போராளிகள், பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதற்கு முன்னரும் யாழ்ப்பாண ஊடகங்களுக்கு என்ன நடந்ததோ அதே சூழ்நிலைக்கு இப்போதும் அவை முகம் கொடுக்க வேண்டிய நிலையில் இருப்பதாக நாம் அச்சமடைகிறோம்.

அமைதியற்ற சூழ்நிலையின் வெளிப்பாடாக இராணுவத்தினர் மேற்கொண்ட இந்தத் தேடுதல் நடவடிக்கையானது கருத்து மற்றும் தகவல் சுதந்திரத்தை நசுக்குவதையும் இராணுவத்தின் நெருக்குவாரங்களுக்கு ஊடகங்கள் உள்ளாவதையும் இந்தச் சம்பவம் வெளிப்படுத்தியிருக்கிறது.

ஒவ்வொருநாளும் போர் மேகங்கள் சூழ்ந்துள்ள இந்தச் சூழலில் சவாலான நிலைமைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையில் யாழ். ஊடகவியலாளர்கள் உள்ளனர்.

இனப்பிரச்சினையில் தொடர்புடைய இருதரப்பினரும் கருத்து மற்றும் தகவல் சுதந்திரத்திற்கு உரிய மதிப்பளித்து ஊடகங்களை இலக்கு வைக்காமல் இருக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆழிப்பேரலையால் பாதிக்கப்படாத 430 குடும்பங்களுக்கு நிதியுதவி!

## - கணக்காய்வாளர் திணைக்களம் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

தங்காலையில் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்படாத 430 குடும்பங்களுக்கு 64 இலட்ச ரூபா வழங்கப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது. கணக்காய்வாளர் திணைக்களம் நடத்திய விசாரணைகளில் இது தெரியவந்துள்ளது.

தங்காலைப் பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த 29 கிராம சேவையாளர்கள் பிரிவில் வசிக்கும் ஆழிப்பேரலையினால் எவ்விதப் பாதிப்பிற்கும் உள்ளாகாத சுமார் 430 குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு ஐயாயிரம் ரூபா வீதம் 64,20,000 ரூபா வழங்கப்பட்டிருப்பதாக கணக்காய்வாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தக் குடும்பங்களின் நேரடி வருமான மார்க்கம் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்படாது இந்தப் பணம் செலுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நிதி அமைச்சின் செயலாளருக்கு கணக்காய்வு திணைக்களம் அறிக்கை அனுப்பியுள்ளது.

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்டதாக மதிப்பீட்டு அறிக்கைகளில் குறிப்பிடப்படாத 26 குடும்பங்களுக்கு வகேகொட மற்றும் ஒஸ்காபுரத்தில் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான வீடமைப்புத்தொகுதியில் வீடுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதும் தெரியவந்துள்ளது.

தங்காலைப் பிரதேச செயலாளர் காரியாலயத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்படாத வீடுகள் என இனங்காணப்பட்ட பத்து வீடுகளுக்காக 30 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளதுடன் ஒரு வீட்டிற்காக 30 ஆயிரம் ரூபா வீதம் இருமுறை வங்கியில் பணம் வைப்பீடு செய்யப்பட்டிருப்பதாகவும் கணக்காய்வு அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மெதக்கெட்டிய கிராம சேவையாளர் பிரிவில் 100 மீற்றர் தூரத்தில் பாதிக்கப்பட்ட ஐந்து வீடுகளுக்குப் பதிலாக அரச சார்பற்ற நிறுவனங்களினால் ஐந்து வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ள நிலையில் அந்த வீடுகளுக்காக பூரண சேத நட்டஈடாக 2,50,000 ரூபா வீதம் 12,50,000 ரூபா வழங்கப்பட்டுள்ளது என்றும் கணக்காய்வு சோதனைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

அதே கிராமசேவையாளர் பிரிவிலேயே எவ்வித பாதிப்பும் ஏற்படாத 44 வீடுகளுக்காக அரைவாசி பாதிக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்து அதற்கென 44,00,000 ரூபா அனுமதிக்கப்பட்டு அதிலிருந்து 22,00,000 ரூபா வீட்டு உரிமையாளர் களுக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும் அந்த அறிக்கை கூறுகிறது.

வகேகொட, ஒஸ்காபுர பகுதிகளில் அரைவாசி சேதமடைந்திருக்கும் வீடுகளுக்கான நிதியுதவியைப் பெற்று தமது வீடுகளை புதுப்பித்துக் கொண்ட நான்கு குடும்பங்களும் உள்ளன.

இந்த விசாரணை நடவடிக்கைகளில் கண்டுபிடிக்கப்பட்ட முறைகேடுகளை சனாதிபதியின் செயலாளர், அரச நிர்வாக அமைச்சின் செயலாளர், சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர், நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான செயலணியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மற்றும் அம்பாந்தோட்டை மாவட்ட செயலாளருக்கும் உதவிக் கணக்காய்வாளர் ஐ.ஜி.அபேரத்னவினால் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

# கொழும்புத் துறைமுகத்தின் வடக்குப் பகுதி ஆழமாக்கல்!

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்தின் வடக்குப்புற வழியை ஆழமாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இலங்கை முதலீட்டு சபை இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. பாரிய கப்பல்களின் வருகையை கருதியே இந்தத் திட்டம் அமுல் செய்யப்படவுள்ளதாக முதலீட்டுச் சபை தெரிவித்துள்ளது. இந்தத் திட்டத்திற்காக இரண்டு பில்லியன் ரூபா செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

# நெருக்கடியான வேளைகளில் தேசியத் தலைவருக்கு பக்கபலமாகச் செயற்பட்டவர்கள் விவசாயிகளே!

## –விவசாயிகள் கௌரவிப்பு நிகழ்வில் சி. கரிகாலன்

(அலுவலக செய்தியாளர்)

சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட பாரிய நடவடிக்கை காரணமாக யாழ். மண்ணிலிருந்து ஐந்து இலட்சம் மக்கள் ஒரே இரவில் இடம்பெயர்ந்து வன்னிப் பிரதேசத்திற்கு வந்தபொழுது அம்மக்களின் உணவுத் தேவையினை நிறைவு செய்து கொடிய போரையும், பொருளாதாரத் தடையையும் எதிர்கொண்டு மிகப் பெரிய வெற்றியீட்டுவதற்கு எமது தேசியத் தலைவர் அவர்கட்கு பக்கபலமாக நின்று செயற்பட்ட ஒவ்வொரு விவசாயும் கௌரவிக்கப்பட வேண்டியவர்களாவர்.


(படம்-சோதி)

இவ்வாறு நேற்று கிளிநொச்சி விவசாய உதவிப் பணிப்பாளர் (விரிவாக்கம்) பணிமனையில் இடம்பெற்ற, கிளிநொச்சி மாவட்ட சிறந்த விவசாயிகளை கௌரவிக் கும் நிகழ்வில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறு வனப் பொறுப்பாளர் சி. கரிகாலன் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்துகையில் தெரிவித்தார்.

விவசாயிகள் சந்திக்கின்ற துயர்கள் சொல்லில் அடங்காதவை தங்கள் உற்பத்தி களை விற்பனை செய்யமுடியாது, மீண்டும் தமது விவாசாய முயற் சிகளை தொடர முடியாது திணறிக் கொண்டிருக்கிறார்கள்.

தற்போது நிலவி வரும் அமைதிச் சூழலில் கூட விவசாயிகள்புதிய செயல்முறை களையோ நவீன தொழில் நுட்பங்களையோ பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர். பல நிறுவனங்கள் எமது மக்களுக்கு விவசாய ரதியில் உதவுகின்ற சூழலிலும் விவசாயத்திற்கு செய்யப்படும் செலவுகள் ஒழுங்காக செலவு செய்யப்படவில்லையென் பதையே அவதானிக்க முடிகின்றது.

எதிர் காலத்தில் விவசாயத் துறையில் முன்னேற்றகரமான திட்டமிடல்கள் அவசியமாக உள்ளதெனவும் தெரிவித்தார்.

முற்பகல் 11.00மணியளவில் கிளிநொச்சி மாவட்ட உதவி விவசாய பணிப்பாளர் திருமதி ஆனந்தராஜா தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் கௌரவிப்பு உரைகளைமாகண உதவி விவசாயபணிப்பாளர் எஸ். சுப்பிரமணியம், கிளிநொச்சி மாவட்ட கமலநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் பி.நாமகள், கிளிநொச்சி, முல்லைத்தீவு விவசாய பிராந்திய ஆணையாளர் திருமதி இராமச்சந்திரா, கிளிநொச்சி அரச செயலக தலைமைப்பீட உதவி அரச அதிபர் செல்வி ஜெயராணி உட்பட பலர் நிகழ்த்தியதுடன் தெரிவு செய்யப்பெற்ற சிறந்த விவசாயிகளுக்கான பரிசில்களையும் வழங்கி கௌரவித்தனர். தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் கிளிநொச்சி மாவட்ட விவசாயப் பணிமனையும் இணைந்து நடத்திய இந் நிகழ்வில் 95சிறந்த விவசாயிகள் கௌரவிக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது.(சோ)

## காவல்துறை சீர்திருத்தப் பிரிவை சர்வதேச செஞ்சிலுவைக் குழு பார்வை

காவல்துறையின் சீர்திருத்தப் பிரிவினரை சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினர் பார்வையிட்டனர்.



நேற்றும், நேற்று முன்தினம் காவல்துறை சீர்திருத்தப் பிரிவு ஆனந்தபுரம் சிறைக்கூடத்தினை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் முல்லை மாவட்ட வதிவிடப்பிரதிநிதியான பெரினிக் அவர்களின் குழுவினர் சென்று பார்வையிட்டு தடுப்பிலுள்ள கைதிகளுடன் கலந்துரையாடியுள்ளனர்.

இச்சந்திப்பானது சீர்திருத்தத்துறை கண்காணிப்பாளர் போராளி வே. அரவிந்தன் மற்றும் ஆனந்தபுரம் சிறைக்கூடப் பொறுப்பாளர், துணை ஆய்வாளர் இ.திருக்குமாரன் ஆகியோருடன் இடம்பெற்றது.

## 350 ரூபாவுக்கு உரம் வழங்கலில் யாழ், கிளி, முல்லை புறக்கணிப்பு!

### –ஓரிரு வாரங்களில் முடிவு கிடைக்குமாம்

(அலுவலக செய்தியாளர்)

உரத்திற்கான நிர்ணய விலை 350 ரூபாவாக சிறிலங்கா அரசினால் தீர்மானிக்கப்பட்டு தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற பொழுதிலும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு மேற்படி திட்டம் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை.

இவ்வாறு நேற்று கிளிநொச்சி விவசாய உதவிப் பணிப்பாளர் பணிமனையில் நடைபெற்ற சிறந்த விவசாயிகளைக் கௌரவிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் பி. நாமகள் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு மட்டுமே மேற்படி மானியத்தினை அரசு வழங்கியுள்ளதெனவும், இந்த மானியமானது மார்ச் மாதம் 31ஆம் திகதி வரை மட்டுமே வழங்கப்படவுள்ளதெனவும் அதற்கு பின்பாக சகல விவசாயிகளுக்கும் வழங்குவது தொடர்பாக தீர்மானிக்கப்படுமென விவசாய அமைச்சினால் நடாத்தப்பெற்ற கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், மற்றும் இந்த மூன்று மாவட்டங்களிலுமுள்ள நெற்செய்கையிலீடுபட்டுள்ள விவசாயிகளுக்கு மேற்படி மானியங்களை ஓரிரு வாரத்தில் வழங்குவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (சோ)

### குடாநாட்டி

நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். அதேவேளை யாழ் குடாநாட்டில் உள்ள சந்திகளில் ஐந்து தொடக்கம் ஏழு வரையிலான இராணுவத்தினர் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். கடற்பாதுகாப்பும் அதிகரித்ததோடு டோரா பீரங்கிப் படகுகளும் நீருந்து விசைப் படகுகளும் பாதுகாப்புக் கடமைகளில் அதிகளவு ஈடுபடுத்தப்பட்டுள்ளது. பலாலி இராணுவ பெருந்தளத்திலிருந்து பல்குழல் ரொக்கட் செலுத்திகளும் டாங்கிகளும் தென்மராட்சி வரணி படை முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன. இந்தக் கனரக ஆயுதங்கள் வரணிச் சந்தியில் மக்களின் பார்வைக்காக குறிப்பிட்ட மணி நேரம் படையினரால் வைக்கபபட்டிருந்தது.

### கோப்பாய்...

கம்பங்கள், சிவப்பு மஞ்சள் கொடிகள் மற்றும் அலங்காரச் சிற்பங்கள் என்பனவும் வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் நேற்று மாலை மேற்படி நினைவாலய வளாகத்தைச் சுற்றி வளைத்து அதனுள் புகுந்த இராணுவம் வளாகத்தைச் சூழ இருந்த கம்பிவலைகளை அறுத்தெறிந்ததுடன் கொடிக்கம்பங்கள், கொடிச்சீலைகள் என்பவற்றை அபகரித்தும் சென்றுள்ளனர். இராணுவம் அத்துமீறி நுளைநது நடத்திய இந்த அராஜகச் செயல்கள் குறித்து கடும் கண்டனத்தைக் கோப்பாய் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை தெரிவித்துள்ளது. (33)

### அரசியல்...

தமிழர்களின் உரிமைகள் குறித்து ஒன்றிணைந்து செயற்படுவது குறித்து இந்தச் சந்திப்பில் கலந்துரையாடுவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (தீ)

### ஐரோப்பிய...

செய்ய வலியுறுத்தும் இதே போன்ற கோரிக்கை ஒன்றினை இந்தியா ஏற்கனவே விடுத்துள்ளதாகவும் தெரியவருகின்றது. இந்தக் கோரிக்கைகளுக்கு வலுவூட்டும் முகமான நடவடிக்கைகளிலேயே தற்போது சிறிலங்கா அரசு ஈடுபட்டுள்ளது.

இதே போன்று தற்போது ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப் பொறுப்பு பிரிட்டனின் கைக்கு வந்திருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் அனைத்திலும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குத் தடை விதிக்கும் கோரிக்கை இந்தியாவிடம் இருந்து பிரிட்டன் உட்பட்ட அனைத்து ஐரோப்பிய நாடுகளிடம் வந்திருக்கின்றது.

இந்தக் கோரிக்கையினை வலுப்படுத்தும் விதத்திலான நடவடிக்கைகளை சிறிலங்காத் தரப்பு எடுக்க வேண்டும் என்று சிறிலங்காவின் சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவு பிறப்பித்திருக்கின்றார் எனக் கூறப்படுகின்றது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் தடை விதித்து அழுத்தம் ஒன்றை நடைமுறைப்படுத்தினால் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைதிப்பேச்சுகளுக்கு விரைவில் திரும்புவார்கள் என சனாதிபதி நினைத்துள்ளார் என சனாதிபதி மாளிகை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### குடா...

உடமைகள், உடுப்புக்கள், உணவுப்பொருட்கள் போன்றவற்றை அநாகரிகமான முறையில் சோதனை செய்தல், கிளறிப்பார்த்தல், மாவீரர் படங்களை அகற்றுமாறு அச்சுறுத்தல், மூடப்பட்ட விடுதலைப்புலிகளின் செயலகங்கள் உடைக்கப்பட்டு சோதனையிடப்பட்டு தளபாடங்களை ஏற்றிச்செல்லுதல் போன்ற மேற்குறிப்பிட்ட இராணுவத்தின் செயற்பாடுகள் போர்நிறுத்த உடன்படிக்கையை மீறும் செயல். அத்துடன் மனித உரிமை மீறல் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான செயற்பாடுகள் மக்கள் மத்தியில் சீற்றத்தையும், மக்களது எதிர்ப்புணர்வையும் அதிகரிப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இச் சந்திப்பின் போது யாழ்.மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் ந.கண்ணனுடன் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவைச்சேர்ந்த அரிபெக்கா கலந்து கொண்டார். (தீ)

### அரியாலை...

பிட்ட இராணுவத்தினர் வீடு வீடாகச் சென்று சோதனைகளை மேற்கொண்டதைத் தொடர்ந்து பலர் தேசிய அடையாள அட்டைகள் இன்மையால் பெரும் சிரமங்களை அடைந்துள்ளார்கள்.

இதேநேரம் இப்பகுதியிலுள்ள மக்கள் பெரும் கஷ்டங்களுக்கு மத்தியில் ஏற்கனவே இடப்பெயர்வுகளுக்கு உள்ளாகி வேறு இடமின்றி இருக்கும் பூம்புகார் மணியம் தோட்டம் பகுதிகளைச் சேர்ந்தவர்களே இப் பகுதியில் அதிகளவில் கொட்டில்கள் கட்டி வாழ்ந்து வருகின்றார்கள்.

இவர்கள் மீது இராணுவத்தினர் கடும் வார்த்தை பிரயோகங்களை மேற்கொண்டதுடன் பயமுறுத்தியும் உள்ளார்கள். இத்தகைய செயற்பாடுகள் காரணமாக மக்கள் மத்தியில் பெரும் பதற்றமான சூழ்நிலை உருவாகியுள்ளது..

இதேவேளை, மீசாலைப் பகுதியிலும் பாரிய சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கையினை படையினர் மேற்கொண்டனர்.

மீசாலை கிழக்குப் பகுதியை அதிகாலை 3.30 மணியளவில் சுற்றிவளைத்த படையினர் 4.30 மணியிலிருந்து எட்டு மணிவரை இப்பகுதியை சல்லடைபோட்டு தேடுதலில் ஈடுபட்டதுடன் வீடுகளிலிருந்த மாவீரர்களின் படங்களை படையினர் அப்புறப்படுத்த வற்புறுத்தியிருப்பதாகத் தெரியவருகிறது.

மற்றும் அடையாள அட்டைகளைப் பார்வையிட்டதுடன் புலிகள் எங்கேனும் மறைந்திருக்கிறார்களா என்று பொதுமக்களை துருவித் துருவி படையினர் விசாரித்துள்ளனர். (41, 28,33)

### நல்லூர்...

கப்பட்டு பற்கள் உடைக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

யாழ்.சென்பற்றிக்ஸ் கல்லூரியில் கல்விகற்கும் ச.நிசன்,சி.விஜிதன் ஆகிய இருவருமே படையினரால் தாக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

இச்சம்பவத்தால் இப்பகுதியில் நேற்று மாலை பெரும் பதற்றம் ஏற்பட்டதுடன் இச்சம்பவம் குறித்து உடனடியாக போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. பாடசாலை மாணவர் தாக்கப்பட்டது குறித்து சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை, தமிழ் மாணவர் ஒன்றியம், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், தொழில்நுட்பக்கல்லூரி மாணவர் ஒன்றியம், யாழ்மாவட்ட தனியார் கல்வி நிறுவனங்களின் ஒன்றியம், பாடசாலை மாணவர் சமூகம் தமது கண்டனத்தைத் தெரிவித்துள்ளன. (28)

### படையினரின்...

வீடுகளுக்குச் சென்ற படையினர் அ[illegible]மையான சோதனை நடவடி[illegible]களையும் நடத்தியுள்ளனர். இதனால் கொதிப்படைந்த மாணவர்கள் இராணுவத்தினருக்கு எதிராக பாரிய எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தயாராகி வருவதால் இராணுவத்தினரின் கெடுபிடிகளை நிறுத்தி இயல்பு நிலைமை ஏற்படுத்தினால் மட்டுமே ஆபத்தான சூழலைத் தடுத்து நிறுத்த முடியும் என அரச அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

வீதியால் போய்வருகின்ற மக்கள், பல்கலைக்கழக மாணவர்கள் தாக்கப்படுவதும் மணித்தியாலக் கணக்காகத் தடுத்து வைப்பதும் கடந்த சில நாட்களாகத் தொடர்கிறது. குறிப்பாக, பல்கலைக்கழக மற்றும் யாழ். நகர சூழலில் அமைந்துள்ள இராணுவ காவலரண்களிலுள்ள இராணுவத்தினரே இவ்வாறு செய்து வருகின்றனர். பல்கலைக்கழக அடையாள அட்டை கிழித்த விடயமானது மிகவும் பாரதூரமான செயலாகவே நாம் கருதுகின்றோம். அதனால், மாணவர்கள் மிகவும் கொதிப்படைந்து, பாரிய எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு அதாவது இராணுவத்தின் கெடுபிடிகளுக்கு எதிராகவும், அரச இயந்திரத்தை முடக்குவதற்கும் தயாராகி வருகின்றனர். ஆபத்தான சூழலைக் கருத்தில் கொண்டு நீங்கள் இம் மாவட்டத்தின் பொறுப்பு வாய்ந்த அதிகாரி என்பதால் அவசரமாக இச் செய்தியை உங்களுக்கு தெரியப்படுத்துகின்றோம். நீங்கள் உடனடியாக சனாதிபதி அவர்களுக்கு இது சம்பந்தமான நிலைமையைத் தெரியப்படுத்தி இதற்கு தகுந்த தீர்வை பெற்றுத் தருமாறு அவசரமாக உங்களிடம் கோரி நிற்கின்றோம்.

அதாவது, இராணுவத்தின் கெடுபிடியினை நிறுத்தி, இயல்பு நிலையை ஏற்படுத்தினால் மட்டுமே இவ் ஆபத்தான சூழலை தடுத்து நிறுத்த முடியும் என எண்ணுகின்றோம். தங்களது பதிலை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம் என்றும் கடிதத்தில் குறிப்பிட்டப்படுள்ளது.

### யுத்த...

ஊடாக இந்தக் கடிதத்தை மகிந்த ராஜபக்ஷ அனுப்பி வைத்துள்ளார். விடுதலைப்புலிகளின் பதிலுக்காக அரசாங்கம் காத்திருக்கிறது. சாதகமான பதில் வரும் என்று எதிர்பார்க்கிறோம்.

விடுதலைப்புலிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி குழுவினரிடம் நேற்றைய சந்திப்பின் போது மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சியினரும் மகிந்த ராஜபக்ஷ விடுதலைப்புலிகளுடன் மீண்டும் பேச்சுக்களை நடத்துவதை ஏற்றுக் கொண்டனர்.

இந்தப் பேச்சுக்களில் யுத்த நிறுத்தம் தொடர்பாகவோ அமைதி முயற்சிகள் தொடர்பாகவோ எதனையும் பேசத்தயாராக உள்ளோம். அரசாங்கம் தமது முன்னைய நிலைகளின் இறுக்கத்தைத் தளர்த்தி ஆசியநாடு ஒன்றில் பேச்சு நடத்தலாம் என்றும் விடுதலைப்புலிகளுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றார் நிமால் சிறிபால டி சில்வா.

இதேவேளை, ஆசியநாடொன்றிலேயே யுத்த நிறுத்த உடன்படிக்கை திருத்தியமைப்பது தொடர்பான பேச்சுக்கள் நடைபெறுமென ஜே.வி.பி.யினருடன் கடந்த புதன்கிழமை நடைபெற்ற சந்திப்பில் சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உறுதியளித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.